கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி

ඥාන ඔලි

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05





பக்கம் 04

உறவை வளர்க்கும் மன்னிப்பு



பக்கம் 08 - 09

குருத்து ஞாயிறு

புனித சூசையப்பரே எங்கள் குடும்பங்களை வழிநடத்தும்

(15.03.2015 - 15 பங்குனி, 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 108 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014

## அநீதிகளை மறைப்பதற்கு கடவுளை ஒருபோதும் பயன்படுத்தாதீர்கள்

**திருத்தந்தை பிரான்சிஸ்.**

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் கடந்த வெள்ளி காலையில் நிகழ்த்திய திருப்பலி மறையுரையில் இருந்து...



- அநீதிகளை மூடி மறைப்பதற்கு கடவுளை ஒருபோதும் பயன்படுத்தாதீர்கள்.
- கிறிஸ்தவர்கள் இறையன்புக்கும், பிறரன்புக்கும் ஏற்ற வகையில், குறிப்பாக இத்தவக்காலத்தில் வாழுங்கள்.
- நோன்பு, பிறரன்புச் செயல்கள் போன்ற வெளிப்புற நடவடிக்கைகளில் தங்களை உட்படுத்தாமல், தேவையில் இருப்போரை நாடிச் செல்லுங்கள்...
- திருச்சபைக்கு காசோலை அனுப்பிவிட்டு தன்னிடம் வேலை செய்வோரிடம் நியாயமற்று நடந்துகொள்ளாதீர்கள்.
- ஆண்டவருக்கு நோன்பு என்பது, மாமிசம் சாப்பிடாமல் இருப்பது அல்ல, ஆனால், மற்றவர்களிடம் சண்டை போடாமல் இருப்பதும், அவர்களைப் பயன்படுத்தாதிருப்பதுமே நோன்பு
- இதயத்தின் உண்மையின்படி நடக்காமல் வெளிப்புறத்தில் சட்டங்களைக் கடைப்பிடிக்கும் பரிசேயரைப் போல் இராதீர்கள்.
- இறையன்பும், பிறரன்பும் ஒன்றிணைந்து செல்ல வேண்டும். கொடுமைத் தளைகளை அவிழ்ப்பது, ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்வது, உடையற்றோரை உடுத்துவது, நீதி வழங்குவது ஆகியவையே இயேசுவுக்கு உண்மையான நோன்பாகும்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

கொழும்பு உயர் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த ஒன்று கூடல் 09ஆம் திகதி திங்கட் கிழமை பேராயர் இல்லத்தில், பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையின் கீழ் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை நடைபெற்றது.

## "குடும்பமாக செபமாலையை செபியுங்கள்"



### தேவத்தை சிறுவர் தினம் (07.03.2015)







படம் : தினுஷ சந்தருவன்

கடந்த 07ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க மறைக்கல்வி நிலையத்தினால், 68வது தடவையாக சிறுவர் தினம் தேவத்தை பெசிலிக்காவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அன்றைய நிகழ்வில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் துணை ஆயர்கள், குருமுதல்வர்கள், மறைக்கல்வி இயக்குனர்கள், அருட்தந்தையர்கள் ஆகியோரால் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்வில் அருட்சகோதர சகோதரிகள், பாடசாலை, மறைப்பாடசாலை மாணவ மாணவியர், மற்றும் ஆசிரியர்கள், மறையாசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

அன்றைய வழிபாட்டில் பேராயர் அங்கு கூடியிருந்த அனைத்து பாடசாலை மாணவ மாணவியர்களுக்கும் விசேட செய்தியாக கொடுக்கப்பட்ட விடயம் தேவ அன்னையை அன்பு செய்யுங்கள், தேவ அன்னை....

தொடர்ச்சி 15ம் பக்கம்

## கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால், மறைபாடசாலைகளில் கற்பிக்கும் மறையாசிரியர்களுக்கு, இவ்வருடத்திலிருந்து நடாத்தப்பட உள்ள கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு பற்றிய விபரங்கள், கடந்த 27.02.2015ன் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு அன்றைய தின அரச வர்த்தமானியைப் பார்க்கவும். பரீட்சை நடாத்தப்பட உள்ள திகதிகள் எதிர்வரும் வர்த்தமானியில் வெளியிடப்படும். இப்பரீட்சைக்கான பாடத்திட்டம் ஏற்கனவே எமது கடந்த திருமறை வழிகாட்டியில் (2014 ஐப்பசி - மார்கழி) இதழில் பிரசுரிக்கப்பட்டது.

மறையாசிரியர்கள் இத்தேர்வில் பங்கேற்று பயன்பெறுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

**அருட்பணி. பியால் ஜானக்க**
**இயக்குனர் , தேசிய மறைக்கல்வி நடுநிலையம்**

## இறைபதம் அடைந்தார்கள்



### அருட்தந்தை அன்சலம் டி குருஸ்

அருட்தந்தை அன்சலம் டி குருஸ் அடிகளார் 10.03.2015 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

இவரின் பூதவுடல் 11.03.2015 அன்று கோட்டை, புனித தோமஸ் ஆலயத்தில் காலை 9.00 தொடக்கம் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 12.03.2015 வியாழக்கிழமை அன்று கொழும்பு உயர் மறைமாவட்டத்தின்..... (தொடர்ச்சி 15ம் பக்கம்)

### அருட்தந்தை சகாயநாதன் அந்தோனி (IVD)



அருட்தந்தை சகாயநாதன் அந்தோனி அடிகளார் மன்னாரில் 10.03.2015 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

இவரின் பூதவுடல் மன்னார் ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டு பின் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. 12.03.2015 அன்று வியாழக்கிழமை அன்று பகல் 2.00 மணிக்கு இரங்கல் திருப்பலி... (தொடர்ச்சி 15ம் பக்கம்)

## குருத்துவத்தின் முதல் நிலைப்படியில் இணைந்துக் கொண்ட புனித ஜோன் மேரி வியான்னி குருமட மாணவர்கள்.



கொழும்பு-15, புனித ஜோன் மேரி வியான்னி குருமடத்தில் 03-03-2015 செவ்வாய்க்கிழமையன்று கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களினால் குருமட மாணவர்களில் மூவருக்கு புகுமுக சடங்கும் (Ministry of Initiation), ஒரு சகோதரருக்கு வாசகம் வாசிக்கும் (Ministry of Lector) , ஒரு சகோதரருக்கு பீடப்பணியாளர் (Ministry of Acolyte) சடங்கையும் அதிகாரப்பூர்வமாக வழங்கினார். அன்றைய விழாவில் கருதினால் ஆண்டகை அவர்கள் மறையுரையின் போது "குருமட மாணவர்கள் குருத்துவத்திற்கான...

தொடர்ச்சி 15ம் பக்கம்

**என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்**

## அவிசாவளை பங்கு மறையாசிரியர்களுக்கான தவக்கால ஒன்றுகூடல்



கொழும்பு உயர்மறைமாவட்டத்தைச் சேர்ந்த அவிசாவளை பங்கு மறையாசிரியர்களுக்கான தவக்கால ஒன்றுகூடல் கடந்த 2015.02.17 அன்று ஹொரனை பங்கு புனித மார்ட்டின் தெபோரஸ் தேவாலயத்தில், கத்தோலிக்க தமிழ் பேசும் மக்கள் பிரிவுக்கு பொறுப்பான அருட்பணி. கலன பீரிஸ் அடிகளாரால் ஏற்பாடு செய்யப்பட்டு அவிசாவளை பங்கில் பணிபுரியும் அருட்சகோதரி நயோமி இராஜநாயகம் அவர்களால் வழிகாட்டப்பட்டு - ஹொரண பங்கு அருட்பணி. அகஸ்டின் அடிகளாரின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து அருட்பணி உதயதாஸ் அடிகளார் கத்தோலிக்க திருமரபும், திருவிவிலியமும் என்ற தலைப்பில் தெளிவான விளக்கத்துடன் உரை நிகழ்த்தி ஆசிரியர்களை விழிப்புறச் செய்தார். அதனைத் தொடர்ந்து கிளரேஷியன் சபையைச் சேர்ந்த அருட்பணி. தேவசீலன் அடிகளார் திருப்பலியை அர்த்தமுள்ள திருப்பலியாக மாற்றி அமைக்கவும் - பாரம்பரியத்தை கடைப்பிடிக்கவும் உயிரோட்டமான முறையில் ஆக்கபூர்வமாக உரை நிகழ்த்தி ஆசிரியர்களை பங்கில் செயல்படும் முறையில் உத்வேகத்துடன் தட்டி எழுப்பினார்.

ஒன்று கூடலில் கலந்துகொண்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மறையாசிரியர்களை படத்தில் காணலாம்.

**தகவல் : மேரி இருதயநாதன், (மறையாசிரியர்)**
**பேராலயம், இரத்தினபுரி**

# கச்சத் தீவு புனித அந்தோனியார் திருவிழா





பங்குனி, 02, 2015 இந்தியா, மற்றும் இலங்கை கடற்படை பாதுகாப்பு உதவியுடன், கச்சத் தீவு புனித அந்தோனியார் திருவிழா, சிறப்புடன் நடந்தேறியுள்ளது. இராமேஸ்வரத்தில் இருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில், பாக் வளைகுடா கடலில் அமைந்துள்ள கச்சத் தீவு புனித அந்தோனியார் திருவிழாவில் இந்தியாவிலிருந்து 110 படகுகளில் சென்ற 4003 பேரும், இலங்கையிலிருந்து 3000த்திற்கும் மேற்பட்டோரும் சனிக்கிழமை மற்றும் ஞாயிறு விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டனர்.

ஆண்டுதோறும் மாசி அல்லது பங்குனி மாதத்தில் இடம்பெறும் கச்சத் தீவு புனித அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு, இரு நாடுகளிலுமிருந்து வந்திருந்த பக்தர்களுடன், சிலுவைப்பாதை, ஞாயிறு காலை திருப்பலி மற்றும் தேர்பவனி இடம்பெற்றன. இவற்றைப் படத்தில் காணலாம்.

## தவக்கால திருயாத்திரை

கொழும்பு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா மறைப்பாடசாலை மறையாசிரியர் குழாமினால் வருகிற 21ந் திகதி சனிக்கிழமை கல்வாரி திருயாத்திரை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இத்திருயாத்திரையில் குடும்ப ஆண்டினை முன்னிட்டு குடும்ப தியானமும் இடம்பெறும்.

இடம் : மாபிம புனித சூசையப்பர் ஆலயம்
வழிநடத்துபவர் : அருட்தந்தை லூயிஸ்
(கார்மேல் சபை)

இத்திருயாத்திரையில் குடும்பமாக இணைந்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**விபரங்களுக்கு. 0777983981**
**தகவல் : பீற்றர் ரொபின்சன்**

## இறைவனோடு 24 மணிநேரம் செலவிட திருத்தந்தை அழைப்பு

சென்ற ஆண்டைப் போலவே, இவ்வாண்டிலும் பங்குனி மாதம் 13, 14 ஆகிய திகதிகளில் 24 மணிநேரம் இறைவனோடு செலவிட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். நற்செய்தியை புதுவழியில் பறைசாற்றும் பணிக்கென உருவாக்கப்பட்டுள்ள திருப்பீட அவை, “இறைவனோடு 24 மணி நேரம்” என்ற கருத்துடன் மேற்கொள்ளப்படும் இந்த தவக்கால முயற்சியை, அறிவித்துள்ளது. பங்குனி 13, வெள்ளிக்கிழமையன்று மாலை 5 மணிக்கு, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் நடைபெறும் பாவ மன்னிப்பு...

தொடர்ச்சி 15ம் பக்கம்

## தவக்கால தியானம்

அரசாங்க கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான விசேட தவக்கால நிகழ்ச்சி கடந்த மாதம் 28ம் திகதி ஹெரனை கல்வாரி திணைக்களத்தில் இடம் பெற்றது. இதன்போது சில பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள் உட்பட பல ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். ஆசிரியருக்கான விசேட சிலுவைப் பாதையும், திருப்பலியும் இடம்பெற்று, ஒரு கலந்துரையாடலும் நிகழ்த்தப்பட்டது. இவர்களைச் சந்தித்து ஆசிர் வழங்க துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையும் வருகை தந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதனை அருட்தந்தையர்கள் இக்னேசியஸ் மற்றும் உதயதாஸ் அடிகளார் ஒழுங்குபடுத்தி இருந்தார்கள்.

**தகவல் : திருமதி கோமிஸ் ஆசிரியர்**
**புனித அன்னம்மாள் பாடசாலை**

# 25 வருடமாக ஹினிதும தவக்கால திருயாத்திரை





கடந்த மாதம் 28, பங்குனி 01 ஆகிய இரு நாட்களில் புனித சூசையப்பர் ஆலயம் கிரான்பாஸ் பங்கு மக்கள் 25வது தடவையாக ஹினிதும தவக்கால திருயாத்திரையை ஒழுங்கு செய்து சென்றனர். அன்றைய நிகழ்வு கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் நன்றி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அன்றைய நிகழ்வில் சிலுவைப்பாதை, தியானம் வழிபாடுகளை அருட்தந்தையர்கள் போல் ரொபின்சன், சஜீவன், லூயிஸ் மற்றும் ஆனந்தன் பர்னாந்து புள்ளே ஆகியோர் வழிநடத்தினார்கள். இவற்றைப் படத்தில் காணலாம்.

**கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயம். உதவிப் பங்குத்தந்தை ஒனாசிஸ் பர்னாந்து**

## தவக்கால ஞான ஒடுக்கம்

கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயத்தில் தமிழ் மக்களுக்கான றோசரி கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஞான ஒடுக்கம் எதிர்வரும் 19ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை புனித சூசையப்பர் ஆலயத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் நடைபெறும். இஞ்ஞான ஒடுக்கத்தை வவுனியா அமலமரித் தியாகிகள் சபை குழுவினரால் முன்னெடுத்து நடாத்தப்படுகிறது. உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கிரான்பாஸ் புனித சூசையப்பர் ஆலயம்.**
**உதவிப் பங்குத்தந்தை ஒனாசிஸ் பர்னாந்து**

# தவக்கால திருயாத்திரை





செக்கட்டித்தெரு புனித அன்னம்மாள் பங்கு மக்களும், கொழும்பு யோசேவ்வாஸ் மன்றமும், வத்தளை மறைகோட்ட பங்குகளும் இணைந்து ஹினிதும கல்வாரி திருத்தலத்திற்கு கடந்த போயா தினமாகிய 05.03.2015 அன்று பயணம் மேற்கொண்டனர். அன்றைய நிகழ்வில் காலை சிலுவைப்பாதை தியானமும், மாலை ஆலய முற்றத்தில் தேவநற்கருணை வழிபாடும் நடைபெற்றது. இந்நிகழ்வை அருட்தந்தையர்கள் ஆனந்தன் பர்னாந்து புள்ளே அடிகளார், உதயதாஸ் அடிகள் மற்றும் அருட்தந்தை சைலன் (கிளேரிசியன்) ஆகியோர் வழிநடத்தினார்கள். இத்திருயாத்திரையில் 1000ற்கும் அதிகமானோர் கலந்து சிறப்பித்தனர்.

**தகவல் படம் : டிக்சன் பர்னாந்து**

# தவக்கால திருநிகழ்வு தேவத்தை





புறக்கோட்டை புனித பனிமய மாதா சங்கத்தினால் 30வது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட தவக்கால திருநிகழ்வு இம்மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ராகம, தேவத்தை லங்கா மாதா பெஸிலிக்கா தேவஸ்தானத்தில் நடைபெற்றது. திருச்சிலுவைப்பாதை சிந்தனைகளை நெறிப்படுத்தி நடத்தி சென்றவர்கள் அருட்பணி லூயிஸ் ஆரோக்கியராஜ் அவர்கள், அருட்பணி சகாயராஜ் அவர்கள். அந்நிகழ்வில் சிலவற்றைக் படத்தில் காணலாம்.

**தகவல் : ஜெயக்குமார்**

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
15,பங்குனி மாதம், 2015 ஞாயிற்றுக்கிழமை.

## இத்தவக்காலத்திலாவது எம்மோடு பேசும் இறைவனுக்கு உளந்திறப்போம். ஏனென்றால் நாம் மனம்மாறி வருவதற்காக இறைவன் ஒவ்வொரு கனமும் ஆவலுடன் பொறுமையாக காத்திருக்கின்றார்.

பாவம் செய்பவன்தான் மனிதன். பாவத்திலேயே மூழ்கிக்கிடப்பவன் அலகை. பாவத்தை விட்டு விலகி புதுவாழ்வு வாழ நினைப்பவன் புனிதன். நாம் தற்போது வாழும் தவக்காலமும் நம்மை புனித வாழ்வு வாழ அழைத்து நிற்கின்றது. எங்குப் பார்த்தாலும் புனித யாத்திரையும் தவக்கால சிந்தனைகளும். யாரைப் பார்த்தாலும் தபமும் செபமும். ஆனால் வாழும் நிலையோ அப்படியே மாறாமல் இருக்கின்றது. நாம் செய்யும் செப தபத்தின் பொருளென்ன? செல்லும் யாத்திரைக்கு அர்த்தம் என்ன? தவக்காலத்தைப் பயன்படுத்தி நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கின்றோம் அவ்வளவுதான். நாள் தவறாமல் தினமும் திருவிவிலியம் வாசிக்கின்றோம். ஆனால் அந்த இறைவார்த்தை நம்மில் காய்த்து கனியாகி பலன் தருகின்றதா? பலன் தரவில்லையேல் அதற்கு காரணம் நம்முடைய கடின உள்ளமும் செல்வ மாயையால் நிறைந்த இதயமுமே. ஒன்றை மட்டும் நாம் புரிந்துகொள்ள வேண்டும் எமது மன்றாட்டு நாம் இறைவனிடம் பேசும் வார்த்தை. ஆனால் திருவிவிலியம் வாசிப்பதோ இறைவன் எம்மோடு பேசும் வார்த்தை ஆகும். இத்தவக்காலத்திலாவது எம்மோடு பேசும் இறைவனுக்கு உளந்திறப்போம். ஏனென்றால் நாம் மனம்மாறி வருவதற்காக இறைவன் ஒவ்வொரு கனமும் ஆவலுடன் பொறுமையாக காத்திருக்கின்றார்.

மனிதன் பிறக்கும்போது அழுதுகொண்டே பிறக்கின்றான். வாழும்போது புறணி பேசிக்கொண்டே வாழ்கின்றான். சாகும்போது ஏமாற்றத்துடன் சாகின்றான். இதுதான் மனித வாழ்க்கையின் உண்மைநிலை. உலகமாகிய கடலில் மனிதன் தன் வாழ்க்கைப் படகை செலுத்துவதுதென்பது அவ்வளவு எளிதானதல்ல. அங்கு நிறைய கஷ்டங்களும் கண்ணீர்களுமே நிறைய உண்டு. இதற்கு இறைவனில் அதிகமான விசுவாசம் தேவை. இந்த விசுவாசம் மட்டுமே நாம் இருக்கின்ற நிலையிலிருந்து இறைவனிடம் நம்மை எடுத்துச் செல்லும் கருவியாக இருக்கின்றது. விசுவாசம் என்பது முழுக்க முழுக்க நம் கண்களை இறைவனில் பதியவைப்பதாகும். வாழ்க்கையில் எவ்வளவு இடர்பாடுகளும் தடைக்கற்களும் வந்தாலும் நம் எண்ணத்தை இறைவனில் முழுக்க முழுக்க பதிய வைத்தாலே போதுமானது. நம்மில் பலர் ஆழமான கிறிஸ்தவ விசுவாசிகளாக இருக்கின்றோம். கிறிஸ்தவ விசுவாசத்தின் மதிப்பீடுகளாகிய நீதி, அன்பு முதலியவற்றைக் கடைப்பிடிக்கினறோம். ஆனால் எதுவரை? அந்த விசுவாசத்தின் பொருட்டு துன்பம் எதுவும் வராதவரை. எப்போது அந்த விசுவாசத்தின் பொருட்டு இழப்புக்களும் இகழ்ச்சிகளும் வேதனைகளும் வெறுப்புக்களும் அடையவேண்டியிருக்கிறதோ அன்றுதான் நமது விசுவாச நிலை ஆட்டம் காணும். வாழ்வில் இழப்பை இகழ்ச்சியை வேதனையை வெறுப்பை கொண்டுவராத விசுவாசம் நம் வாழ்வை இன்னும் தொடாத விசுவாசமே.

எம்மை நோக்கி வரும் கடவுளை நோக்கி நாம் விசுவாசத்துடன் பயணிக்க வேண்டும். இல்லையெனில் எம் வாழ்வில் வசந்தமும் இருக்காது. நாம் வாழ்கின்ற இடத்திலும் நாம் நல்ல கிறிஸ்தவர்களாக வாழவும் முடியாது. தவக்காலத்தை பாதி தூரம் கடந்து விட்ட நிலையில் இருக்கும் நாம் மீதியிருக்கும் தவக்காலத்தை கடவுளோடு ஒப்புரவாகி மனமாற்றம் பெற்றவர்களாக நல்ல கிறிஸ்தவர்களாக வாழ்ந்திட முயற்சி செய்வோம்.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**




சகமனிதனின் துக்கத்திற்காக கண்ணீர் வடிப்பவனே - தன்னை மனிதன் என்ற நிரூபித்துக் கொள்கிறான்.

பல நேரங்களில் மகிழ்ச்சியில் கை குலுக்கும் கைகள், துக்கத்தில் கண்ணீர் துடைக்க வருவதில்லை. இதை நாம் நமது வாழ்வில் ஏதாவது ஒரு தருணத்தில் உணர்ந்திருப்போம். மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள விளையும் மக்கள் துக்கத்தை பகிர்ந்து கொள்ள முனைவதில்லை. மனிதன் விரும்பாத ஒன்று துக்கம். மனிதன் துக்கத்தை மட்டும் தள்ளிவிட முனைவதில்லை. மாறாக துயரத்தில் இருக்கும் மனதரையும் தள்ளிவைக்க முடிவு செய்கிறான். துயரத்தில் இருக்கும் மனிதருக்கு தான் உதவி செய்யும் போது ஒருவன் துயரத்திலும், சிக்கல்களிலும் மாட்டிக்கொள்வதாக நினைக்கிறான். ஒரு சாலை விபத்தில் அடிப்பட்டு கிடக்கும் மனிதருக்கு உதவி செய்யும்போது எந்த ஒரு பயனும் இன்றி தனது பணம், நேரம், உழைப்பு அனைத்தும் வீணாக விசையமாவதாக கருதுகிறான். இதனால் மற்றவரை கண்டு கொள்ளாமல் இருப்பதால் எந்த துன்பமும் சிக்கலும் வரப்போவதில்லை என்று மனிதன் மற்ற மனிதனை புறக்கணிக்கிறான். மற்றவன் மனிதன் என்ற நிலையையே மறக்கிறான். மறுக்கிறான்.

இந்நிலையில் நன்கு பயின்ற, திருச்சட்டத்தில் கைதேர்ந்த திருச்சட்ட அறிஞர் ஒருவர் இயேசுவிடம் ஒரு கேள்வியை எழுப்புகிறார் “எனக்கு அடுத்திருப்பவர் யார்?” அடுத்தவருக்கு உதவி செய் அடுத்தவரை துன்பப்படுத்தாதே, அடுத்தவருக்கு ஆறுதலாக இரு என்று சொல்லிக்கொண்டே போகும் தருணத்தில் இக்கேள்வி நமக்கு அவசியமாகினது. சொல் வடிவில் இருக்கும் இக்கேள்விக்கு மிக அழகாக, ஆழமாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் “நல்ல சமாரியன்” உவமையின் வாயிலாக நமக்கு அடுத்திருப்பவர் யார் என்னும் கேள்விக்கு விடையளிக்கிறார். இயேசுவின் கண்ணோட்டத்தில் ஏழைகள், அனாதைகள், ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், உரிமை இழந்தோர் போன்றவர்கள் தனக்கு அடுத்திருப்பவராக கூறுகிறார். இப்படி இருக்கின்றபோது ஒருவரது உறவினர்களும் நண்பர்களும் ஒருவருக்கு அடுத்திருப்பவராக கருதலாமா? என்ற கேள்வி நம்முள் எழலாம், “தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்” என்பார்கள். உறவினர்களும் நண்பர்களும் ஒரு சிக்கல் வரும்போது உடனிருந்து உதவி செய்வோம். ஏனெனில் அவர்கள் இதயத்துக்கு நெருக்கமானவர்கள். ஆனால், இந்த நவீன உலகில் நாம், நான் எனக்கு, என்ற மனநிலை கொண்ட வாழ்க்கையை நாம் வாழ தொடங்கிவிட்டோம். இந்நிலையில் ஒருவருக்கு உறவினரும் நண்பரும் அயலானா அடுத்திருப்பவராகவே இருக்கிறார். இதன் விளைவாகத் தான் இன்று நம் வாழ்வில் பல ஏமாற்றங்களும், துரோகங்களும் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

“எனக்கு அடுத்திருப்பவன் யார்” என்ற கேள்விக்கு இயேசு தரும் ஆழமான பதில், அதாவது உதவிக்காக ஏங்குபவர், ஒரு வேளை அனாதைகள், கைவிடப்பட்டோர், விதவைகள், அன்றாட வாழ்விற்காக போராடும் ஏழைகள், நீதி மறுக்கப்பட்டோர், உரிமை இழந்தோர் ஆகியோரை அடுத்தவராக பார்க்கும் இயேசு கிறிஸ்து நமது கண்ணோட்டத்தில் மாறுபடுகிறார். மேற்குறிப்பிட்ட அனைவரையும் நமது அன்றாட வாழ்வில் பார்த்து, சந்தித்து உதவிக் கரம் நீட்டாமலும், கண்டுகொள்ளாமலும் இருந்திருக்கின்றோம் அவர்கள் மனிதர்கள் என்பதையே நாம் மறந்திருக்கின்றோம், மறுத்திருக்கின்றோம்.

> **நாம் கொண்டிருக்கும் பேராசையின் காரணமாக நமது நட்பு வட்டாரமும் உறவு முறையும் உயிருக்காக போராடிக் கொண்ருக்கிறது. இப்பேராசையானது. நம்மில் பிளவை ஏற்படுத்துகிறது.**

“ஆடையில்லாமல் பிறக்கும் மனிதர், ஆசைகள் இல்லாமல் பிறப்பதில்லை” இன்றைய உலகில் மனிதருள் இருக்கும் ஆசைகள் அனைத்தும் பேராசைகளாக மாறி தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கின்றன. இப்பேராசையின் காரணமாக இன்று நம்மிடையே பிளவுகள். ஏற்றத்தாழ்வுகள், சண்டைகள், போராட்டங்கள் என பல்விதமான பிளவுகள் நமமிடையே காணப்படுகின்றன. நாம் கொண்டிருக்கும் பேராசையின் காரணமாக நமது நட்பு வட்டாரமும் உறவு முறையும் உயிருக்காக போராடிக் கொண்ருக்கிறது. இப்பேராசையானது. நம்மில் பிளவை ஏற்படுத்துகிறது. நாமும் இரு குழுக்களாக பிரிக்கின்றோம்.

1) நமது ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்றாக நமக்கு அடுத்திருப்போரை அடக்கி அவர்களை அடிமையாக்கும் ஆளும் வர்க்கம் ஒரு புறமும்.
2) அடிமைகளாக வாழும் மனிதர்கள் மற்றொரு புறமும் இருக்கிறார்கள்.

பெரும்பாலும் நமது அன்றாட வாழ்வில் அடுத்தவரை தொல்லையாக கருதுகிறறோம் (Hell is my neghbour) என்று பிரெஞ்சு தத்துவ ஞானி ஜான் பால் சார்த் கூறுகிறார். நமக்கு அடுத்திருப்பவர் ஏதாவது ஒரு விதத்தில் நம்மை பாதிப்பவராகவே இருக்கிறார். இதனால் நமது அன்றாட வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை ஏற்க நாம் தயங்குகிறோம். இதனால், நமக்கு தேவையானவற்றை நமக்கு இன்பம் தரக்கூடியவற்றையே நாம் தேர்ந்தெடுக்கிறோம். ஒவ்வொருநாளும் நமது அன்றாட வாழ்விற்கு பலர் உதவி செய்பவரை நாம் பொருட்படுத்துவது இல்லை. அடுத்தவரை நாம் ஒரு இயந்திரமாகவே பார்க்கிறோம். பணத்தினால் அனைத்தையும் அடைந்துவிட முடியும் என்று நினைக்கிறோம் மனிதரை மறுக்கிறோம்! மறைக்கிறோம்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

## உண்மை உறைக்கும்

கமிலஸ்





# உறவை வளர்க்கும் உரம் மன்னிப்பு

உறவையும் உரையாடலையும் உருப்படுத்துகின்ற வரங்களில் முக்கியமானது மன்னிப்பு இம்மாபெரும் கொடையைப் பற்றி அறிந்துக் கொள்வோமா?

## மன்னிப்பு என்றால்....

***அடுத்திருப்பவரை எந்த நிபந்தனையும் இன்றி மனதார ஏற்றுக்கொள்ளுல்தான்***

***மன்னிப்பு :*** மன்னிப்பு என்பது ஏற்றுக்கொள்ளுதலின் அடையாளம். பிறரை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில் அவரை மனதார மன்னித்தல் வேண்டும். ஆக மன்னிப்பு என்பது ஏற்றுக்கொள்ளுதலும் அடுத்தவரோடு இணைந்து வாழ்தலுமே. உறவின் முதல் உரமான அன்பின் உச்சம்தான் மன்னிப்பு. அன்பிற்கும், மன்னிப்பிற்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்படுதல் எனும் ஏற்றமிகு செயல் ஏற்படுகின்றபோது அதன் அடையாளமாக மன்னிப்பு எனும் மகத்துவக் கொடை, மருத்துவ குணம் (குணப்படுத்தும் குணம்) நம்மில் மலர்ந்து நம் உறவின், உரையாடலின் விரிசல்களை குணப்படுத்தும்.

## மன்னிப்பின் மாண்பும், மகத்துவமும்...

மன்னிப்பைச் சுவைத்து அனுபவித்தவர்கள் மட்டுமே மன்னிப்பை வழங்க இயலும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

மன்னிப்பு முதலில் மாண்புமிக்க, மகத்துவமிக்க ஒரு உயரிய, உன்னதக் கொடை இந்த ஒரு அறிதலும், புரிதலும் நம்மிடையே விழிப்புணர்வாக இருக்கும்போது நாம் மன்னிக்கின்ற மாமனிதர்களாக மாறிப்போகிறோம்.

***மன்னிக்கின்ற போது சாதாரண மனிதர்களாகிய நாம் நம்மிடத்திலிருக்கும் கடவுள் தன்மையை கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறோம்.***

தவறுவது மனித இயல்பு : தவற்றை மன்னிப்பது தெய்வத்தின் இயல்பு என்பது இதைத்தானே சுட்டுகிறது. மன்னிப்பைப் பெற்றவர்களால் மட்டுமே பிறரை முழுமையாக மன்னிக்க முடியும் என்கிறது இன்றைய உளவியல். ஆக மன்னிப்பின் மாண்பினையும், மகத்துவத்தையும் எப்போது நாம் அனுபவித்துப் பெறுகிறோமோ அப்போதுதான் அம்மாண்பினை பிறருக்கும் கொடுக்க முடியும் என்பதை உணர்ந்து கொள்வோம்.

## மன்னிப்பு எப்போது சாத்தியம்?

மாபெரும் மனித சக்தியாகிய மன்னிப்பு மனிதர்களின் மகிழ்ச்சியின் மறைபொருள் என்றால் வியப்பதற்கேதுமில்லை. இம்மாபெரும் மகிழ்ச்சியின் மறைபொருள் எப்போது நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் சாத்தியமென்றால் *மறந்துபோதல்* எனும் குணம் நம்மிடையே இருக்கின்ற போதுதான் பலர் சொல்லக் கேட்டிருப்போம் "நான் அவன்/ள் செய்த தவறை மன்னித்துவிடுகிறேன் ஆனால் ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்பார்கள் ஆனால் இது அவர்கள் அடுத்தவரை முழுமையாக மன்னிக்கவில்லை என்பதன் அடையாளம்தான். ஆக மன்னித்தல் என்பது ஏற்றுக்கொள்ளுதல் எனும் ஏற்றமிகு பண்பையும் உள்ளடக்கியதாய் அடுத்தவரின் தவறை மறந்து விடுதலில் தான் உண்மை மன்னிப்பு உயிர்பெறுகிறது.

ஆக மன்னித்தல் எனும் நலம்தரும் கொடை, குணம், நம் வாழ்விலும் சாத்தியப்பட வேண்டுமென்றால் அடுத்தவர் நமக்குச் செய்த குற்றம், துரோகம், அநியாயச் செயல்களை மன்னிப்பது என்பதையும் தாண்டி அந்த நினைவுகளுக்கு பூட்டுப்போட்டு தூர எறியும்போது நம் அன்றாட வாழ்விலும் மன்னிப்பு மலர்ந்துக் கொண்டேயிருக்கும், அதன் வெளிப்பாடாக நம் வாழ்வும் பிறருக்கு பயனுள்ளதாக இருக்கும்.

## ஏன் மன்னிப்பு....?

மன்னிப்பதால் நான் தோற்றுவிட்டதாக எண்ணுகிறேன். என்னை யாரும் மதிப்பதில்லை, என்னையே நான் தாழ்வாகக் கருதுகிறேன். இதெல்லாம் நாம் மன்னிக்காமல் இருக்கக் கூறும் ஒருசில காரணங்கள். ஆனால் ஏன் மன்னிக்க வேண்டும்? எதற்கு மன்னிப்பு அவசியமென்று சிந்திக்கும்போது ஒருசிலவற்றை சிந்தைக்கு எடுத்துக் -கொள்ள வேண்டும்.

- முதலில் நாம் விசுவசிக்கிற நம் இறைவனாகிய ஆண்டவர் தன்னை காட்டிக்கொடுத்தவன், கைவிட்டவர்கள், தன் உயிரைப் பறித்தவர்கள் என எல்லோரையும் மன்னித்தார். அவரின் பிள்ளைகள் நாம். எனவே பிறரை மன்னிப்பது நம் கடமை என உணர வேண்டும்.
- பிறரை மன்னிக்கின்ற போது அவரின் தீச்செயல்களை தீயிலிடுகின்றபோது நம்மிலே இருக்கிற நான் என்கிற ஆணவம் களையப்படுகின்றது. நாம் என்கிற அன்புணர்வு அரும்புகிறது.
- ஆணவம் அழிக்கப்படுகின்றபோது நம்மிலும், நம் வழியாகவும் அன்பு எனும் அடிப்படை மனித குணம் வழிந்தோடுகின்றது.
- மன்னிப்பது தான் பிறரை ஏற்றுக்கொள்வதின் அடையாளமாக இருக்கின்றது. கிறிஸ்தவ நெறியின் அடிப்படை சாரம்சமும் மன்னிப்பு என்பதாகத்தான் இருக்கிறது.

எனவே இந்த மன்னிப்பின் மாண்பினை விவிலியத்தின் விழிகளில் வாசிப்போம்

## விவிலியத்தின் விழிகளில்....

**லூக்கா : 6:37 "மன்னியுங்கள் மன்னிப்பு பெறுவீர்கள்"**

முதலில் நாம் மன்னிப்பை கொடுக்க வேண்டும் என்பதை உணர்ந்து பிறரை மன்னித்து அவரின் தீச்செயல்களை அடியோடு மறந்து அதனால் நம் பாவங்களுக்கு மன்னிப்பு பெறுவோம்.

**எபே 1:7 "கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள் வளத்திற்கேற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார்" இம்மீட்பால் குற்றங்களிலிருந்து நாம் மன்னிப்பு பெறுகிறோம்"**

நம் ஆண்டவராகிய கிறிஸ்துவின் இரத்தத்தினால் என் குற்றங்களை மன்னித்துள்ளார் எனும் விசுவாச வாழ்க்கை, நம்மையும் பிறரையும் மன்னித்து அதனால் நம் உறவையும், உரையாடலையும் உருப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**மாற்கு : 4:24 : நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால்தான் உங்களுக்கும் அளக்கப்படும்.**

என்னை கடவுள் மன்னிக்க வேண்டும். ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்ற அதே வேகத்துடன் அயலாரையும் மன்னிக்கும்போது கடவுள் நம்மை மன்னிப்பார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## நடைமுறை வாழ்க்கைக்கு....

- மன்னிக்கும்போது நம் மனது எதையோ இழந்துவிட்டதுபோலும், தோற்றது போலும் வலிக்கத்தான் செய்யும். ஆனால் இந்த ஒரு வலிதான் நம் வாழ்விற்கான வழியாக இருக்கிறது என்பதை கண்டிப்பாக உணர்ந்த கொள்ள வேண்டும்.
- பல நேரங்களில் மன்னிப்பு கசக்கிறது. காரணம் நம்மை எதிர்ப்பவர்களை எல்லாம் நாம் எதிரிகளாகவே பார்க்கிறோம். "எதிர்ப்பவரெல்லாம் எதிரிகளல்ல நம்மோடு இருப்பவரெல்லாம் நண்பர்களும் அல்ல" என்பதை உணரும்போது மன்னிப்பு சாத்தியமாகிறது.
- துன்புறுத்துவோருக்காக செபியுங்கள்" என்கிறார் ஆண்டவர். இச்செயல் பேரன்பின் அடையாளம். அதுதான் மன்னிப்பின் மறுமொழி பெயர்ப்பு. ஆக துன்புருவோருக்காக செபிப்பதும் மன்னிப்பின் அடையாளம்தான். அதனால் உறவையும், உரையாடலையும் வளர்க்கும் உன்னத கருவிகளாக உலா வர இத்தவக்காலத்தில் மன்னித்து உறவுகளை வளர்த்துக்கொள்வோம்..



# பெண்கள் தினம்

### பங்குனி 08

தாய்மையின் திருவுருவாய்
தலைநிமிர்ந்து நிற்பதனால்
தவறாது நினைத்து வாழ்த்த
தகுதி கொண்ட **பெண் குலமே!**
தக்கவிதம் உனைப் போற்ற
தாராளமாய் **நன்றி** கூற
தத்துவமாய் அமைந்ததிந்த
தரணியிலே **பெண்கள் தினம்!**

ஆயிரத்து தொள்ளாயிரத்து
எட்டாம் ஆண்டு அமெரிக்காவில்
ஆடை தயாரிப்பு நிறுவனத்தில்
அல்லல் பட்டுழைத்த மகளிர் தம்
அடிமைத்தனத்தை நீக்கிக் கொள்ள
கையிலெடுத்த வேலை நிறுத்தம்
அற்புதமாய் வென்ற நிகழ்வே
ஆண்டுதோறும் **பெண்கள் தினம்!**

தந்தை தாய்க்கு மகளாகி
தம்பி அண்ணனின் சகோதரியாய்
நட்புக் குகந்த சிநேகிதியாய்
நல்லதொரு வாழ்க்கைத்
துணைவியுமாய்
பிள்ளைகளுக்கு ஒரு நற் தாயாய்
பரிமாணங்கள்தான் உனதெத்தனை
அத்தனை நிலையிலும் உனக்கிருக்கும்
ஆற்றலைப் போற்றவே
**பெண்கள் தினம்!**

பொருளாதார பிரச்சினையா?
அரசியலென்னும் அவசியமா?
சமூகம் மேம்பட சாதனையா?
அத்தனையிலும் உன் பங்கேற்பு
அபரிதமாய் இருக்கையிலே
பழமைவாதிகள் பார்வை
மட்டும் உனைப்
பதுக்கி வைக்க நினைக்கின்ற
பாழும் செயலைக் கண்டிக்க
பதிலாய் எழுந்தது **பெண்கள் தினம்!**

ஆணவன் ஆதாமின் விலா எலும்பே
ஆண்டவர் கைவண்ணப் பேரன்பே
அகிலத்தில் **அன்புக்கு** அடையாளமாய்
ஆதாரமாய் உள்ள துன் இயக்கம்
ஆனாலும் உனக்குரிய சரிபாதியை
அளிக்காமல் வாழ்வ தா(ஆ)ண்
வழக்கம்
அத்தனை குறைகளிலும்
அமைதியோடு - எவரையும்
அரவணைத்து நடப்பதற்கெம்
**வணக்கம்!**



**ஆக்கம் ஆல்பர்ட்**



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

# அருளடையாளங்கள் ஓர் அலசல்

15



# தேவநற்கருணை

## நற்கருணைப் பலி

தொடக்க திருச்சபையின் காலம் தொடங்கி இன்று வரை அதன் வாழ்வின், வழிபாட்டின் ஊற்றாகவும், சிகரமாகவும் திகழ்வது நற்கருணையே. இந்நற்கருணையானது பின்வரும் மூன்று பரிமாணங்களை தன்னகத்தே அடக்கி கொண்டுள்ளது.

(1) பலி (Sacrifice) (2) விருந்து (Communion) (3) பிரசன்னம் (Prese...)

மூன்றும் தனித்துவமானது. ஒன்று மற்றொன்றுக்கு இணையானது. ஒன்றை உயர்வாகவோ இன்னுமொன்றை குறைவாகவோ மதிப்பீடு செய்ய முடியாது. கத்தோலிக்க திருச்சபையின் விசுவாசத்தின் கருவூலம் நற்கருணையே. இருப்பினும் தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய மடலில் (11:17-34) நற்கருணைப் பற்றிய காலத்தால் முந்திய பாடத்தைத் தருகின்றது. அதன்படி நற்கருணை குறிப்பாக விருந்து என தொடக்கத் திருச்சபையில் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. எனவே விவிலியப் பின்னணியிலும், இறையியலின் அடிப்படையிலும் அதிகமாக வலியுறுத்தப்படுவது விருந்து என்பது சரியே. இருப்பினும் இக்கட்டுரையில் நற்கருணைப் பலி என்றே சிந்திக்க விழைகின்றோம். நற்கருணை விருந்து மற்றும் பிரசன்னம் ஆகிய இரண்டு பரிமாணங்களுக்கும் பலியே என்பதுவே மையமாக அமைகின்றது. நற்கருணையின் விருந்து, பிரசன்னம் என்ற பண்புகள் பலி என்ற பண்பிலிருந்தே புறப்படுகின்றன. அதிலிருந்தே அர்த்தம் பெறுகின்றன. கிறிஸ்து தம்மையே பலியாக்கியதன் வழியாகவே அவரது உடல் அருள் அடையாள முறையில் விருந்தாகவும், பிரசன்னமாகவும் மாறியுள்ளன.

ஒவ்வொரு சமயத்திலும் பலி முக்கிய இடம் பெறுகிறது. இந்து மதம் பலிகளுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது. யாகங்கள் வழியாக இறைவனுக்கு பலி செலுத்தினர். யாகங்கள் வழியாக மிருகங்கள் வெட்டப்பட்டு கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டன. ‘யாகம்’ என்பது தன்னை இறைவனுக்கு பலியாக்குவது என்று பொருள்படும்.

### யூத மறையில் பலி:

யூத மறையிலும் பலி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. எம் முதுபெரும் தந்தையாகிய ஆபிரகாம் தன்னுடைய ஒரே பேறான மகன் ஈசாக்கை பலியிடத் தயங்கவில்லை என விவிலியம் கூறுகின்றது. (தொ.நூ 22:2-10) இஸ்ரயேல் மக்களின் 12 கோத்திரங்களில் இருந்து இறைவனுக்கு பலி ஒப்புக் கொடுப்பதற்கு என்று லேவியர் குலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. ஆரோனின் வழிவந்த இவர்கள் 5 விதமான பலிகளைச் செலுத்த பணிக்கப்பட்டனர்.

1. எரிபலிகள்
2. தானியப் படையல்கள்
3. நல்லுறவு காணிக்கைகள்
4. பாவப் பரிகாரப் பலிகள்
5. பாவக் கழுவாய்ப் பலி

இறைவன் ஒருவருக்கே அனைத்தும் சொந்தம் என்பதன் அடையாளமாக முதலிரண்டு பலிகளும், அவ்விறைவனோடு இழந்த உறவினை புதுப்பித்துக் கொள்வதற்கு ஏனைய மூன்று பலிகளையும் யூதர்கள் பலிகளாகச் செலுத்தினர்.

மேற்குறிப்பிட்ட 5 பலிகளைத் தவிர்ந்த ஏனைய மூன்று முக்கிய பலிகளையும் இஸ்ரயேல் மக்கள் செலுத்தினர். இதனை பாஸ்காப் பலி, உடன்படிக்கையின் பலி, பாவப்பரிகாரப் பலி (வி.ப 24:3-8) என வகுக்கலாம்.

### 1. பாஸ்காப் பலி :

இது இஸ்ரயேல் மக்கள் எகிப்து அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டதன் நினைவாக, ஒவ்வொரு ஆண்டும் நிசான் மாதம் 14ம் திகதியன்று மாலை முழு பௌர்ணமி தினத்தில் கொண்டாடப்பட்டது. விடுதலைப் பயண நூல் 12ம் அதிகாரம் பாஸ்கா பலி கொண்டாடப்பட வேண்டிய முறைதனை தெளிவாக வகுத்துத் தருகின்றது. பாஸ்காப் பலியை ஒப்புக் கொடுத்து, பாஸ்கா விழாவைக் கொண்டாடுவதன் வழியாக ஒவ்வொரு இஸ்ரயேலரும் தங்கள் முன்னோர் பெற்ற விடுதலை அனுபவத்தை உணர்ந்தனர். இது வெறும் நினைவுபடுத்தப்பட்ட நினைவுகூறல் அல்ல, மாறாக மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படும் விடுதலையை இது குறிக்கும். ஆடுகளின் இரத்தத்தால் இஸ்ரயேலின் தலைச்சன் பிள்ளை காப்பாற்றப்பட்டது. அதேபோன்று ஒவ்வொரு ஆண்டும் பலியாக்கப்படும் ஆட்டின் இரத்தம் வழியாக ஒவ்வொரு இஸ்ரயேலரும் இறைவனின் மீட்பையும் விடுதலையையும் பெற்றதாக உணர்ந்தனர்.

### 2. உடன்படிக்கைப் பலி :

இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் இருந்து விடுதலை அடைந்ததன் பிறகு சீனாய் மலையடிக்கு வந்ததும் இறைவன் மோசேயோடு செய்து கொண்ட புதிய உடன்படிக்கையின் அடையாளமாக உடன்படிக்கை பலி அமைகிறது. இவ்வுடன்படிக்கையின் வழியாக “இறைவன் தங்கள் கடவுளாக ஏற்றுக் கொண்டு, தாங்கள் இறைவனின் பிள்ளைகளாக வாழ” இறைவனுக்கு வாக்கு கொடுத்தனர். இப்பலி பாஸ்கா பலிபோன்று ஒவ்வொரு வருடமும் ஒப்புக்கொடுக்கப்படவில்லை. இருப்பினும் இப்பலி இஸ்ரயேல் மக்களின் உள்ளங்களில் ஆழப்பதிந்திருந்தது. இவ்வுடன்படிக்கை பலி வழியாகவே இஸ்ரயேல் மக்கள் ஓர் இனமாகவும் யாவேயின் மக்களாகவும் உருமாற்றம் பெற்றனர்.

### 3. பாவப் பரிகாரப் பலி :

மூன்றாவதாக பாவப்பரிகாரப் பலி (லேவி 16) ஆண்டிற்கு ஒரு முறை ஒரு செம்மறியின் மேல் மக்கள் தங்கள் பாவங்களைச் சுமத்தி அதனைத் தலைமைக்குரு பலியாக ஒப்புக் கொடுத்து அதன் இரத்தத்தை மக்களின் மீது தெளிப்பார். இதனால் மக்கள் இறைவனின் பாவ மன்னிப்பை பெற்றதாக உணர்ந்தனர். இறைவனோடு ஒப்புரவு கொள்வதன் அடையாளமாகவே இது அமைந்தது. இப்பலி ஒப்புரவு நாளன்று ஒப்புக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு யூத சமூகத்தில் பலி இறை உறவை ஏற்படுத்தும் செயலாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

### இயேசு கிறிஸ்துவின் கல்வாரிப்பலி

இயேசு தம்மையே மக்களுக்காகப் பலியாக்க முன்வந்தார். தான் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற தன்னை பலியாக்க வேண்டுமென்பதை நன்கு அறிந்திருந்தார். அவரது இறப்பு ஓர் விபத்தோ அல்லது இயல்பான நிகழ்வோ அல்ல. இயேசு தம்மை இறையரசின் இறைவாக்கினராக புரிந்து கொண்டமையினால் இறைவாக்கினரது வாழ்வு போன்றே தம் வாழ்வு அமையும் என்பதை நன்கு அறிந்திருந்தார். தானும் இறைவாக்கினரைப் போல இரத்தம் சிந்த வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். (லூக் 11:50) தனது பணியின் நிறைவு தனது உடலைக் கையளிப்பதில் தான் அடங்கியுள்ளது என்பதை அறிந்திருந்தார். இயேசுவும் தன்னுடைய இறப்பை சீடர்களுக்கு பல முறை முன்னறிவித்ததை நாம் நற்செய்தி ஏடுகளில் காண்கின்றோம். (மாற்கு 8:31, 9:31, 10:33-34) இயேசு தாம் பாடுபடுவதற்கு முந்தின இரவில் தமது உடல் பலருடைய மீட்புக்காக வழங்கப்படுவதாக தமது சீடர்களுக்குத் தாமே அறிவித்தார். (மாற்கு 10:43) அவரது இரத்தம் உலகின் மீட்புக்காக சிந்தப்படும் என்பதை இயேசு தாமே அறிவித்தார். இயேசுவின் இறப்பு அவர் மானிடரை அன்பு செய்ததன் விளைவு (யோ 15:43)

தூய யோவானின் நற்செய்தியிலும், திருவெளிப்பாடு நூலிலும் இயேசுவைப் பாஸ்காப் பலியாக சித்தரிக்கின்றார். **"இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குவர்"** (யோ 1:29) இவ் ஆட்டுக்குட்டியாம் இயேசுவைப் பற்றி சில இடங்களில் குறிப்பிடுகிறார். (தி.வெ 5:6-13, 7:9-17, 14:1-10, 19:7-9, 21:9-14)

யோவான் நற்செய்தியின் படி பாஸ்கா உணவைக் கொண்டாட ஆட்டுக் கிடாக்கள் பலியாக்கப்பட்ட நேரத்தில் தான் இயேசுவும் கொல்லப்பட்டார் என்பது கண்கூடு. இதனுடைய நோக்கம் **"இயேசுவே பலியிடப்பட்ட பாஸ்கா ஆடு"** என்பது தெளிவு. இவ்வாறே தூய பவுலும் இயேசுவின் இறப்பை புரிந்து கொண்டார். **"நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார்"** (1கொரி 5:7)

### கல்வாரிப் பலியே நற்கருணைப் பலி (திருப்பலி)

இயேசு கிறிஸ்துவின் கல்வாரிப்பலி, பழைய ஏற்பாட்டு பலிகளை எல்லாம் நிறைவுக்கு கொண்டு வந்த பலி. கிறிஸ்துவின் சிலுவைப் பலியில் ஏனைய பலிகளெல்லாம் பொருள் இழந்து விடுகின்றன. நிறைவானது தோன்றும்போது குறைவானது மறைந்து போகின்றது. இயேசு கிறிஸ்துவின் கல்வாரிப் பலி எக்காலத்திற்கும் முறையாக நிகழ்ந்துவிட்ட பலி. இயேசுக்கிறிஸ்து ஒரே ஒரு முறை உடலைப் பலியாக செலுத்தியதன் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கின்றோம். (எபி 10:10)

இக்கல்வாரிப் பலி நாளாந்தம் நற்கருணைப் பீடத்தில் நினைவு கூரப்படுகின்றது. திருப்பலி என்பது கல்வாரிப் பலியே. இது இங்கே அருளடையாள முறையில் கொண்டாடப்படுகின்றது. நற்கருணைப் பலி, கல்வாரிப் பலியை பிரசன்னப்படுத்தும் நிகழ்வு ஆகும். இதனை தூய பவுல் **"இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனி இறக்கமாட்டார். இனி சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்லர் என நாம் அறிந்திருக்கின்றோம். அவர் இறந்தார். பாவத்தை ஒழிக்க ஒரே ஒரு முறை இறந்தார் இப்போது அவர் வாழ்கின்றார்"** (உரோ 6:9-10) என கூறுவார்.

**"நற்கருணைப் பலி ஓர் உண்மையான காணக்கூடிய பலியாகும். நற்கருணைப் பலி கல்வாரிப் பலியைப் பிரசன்னப்படுத்தி, எல்லாக் காலங்களுக்கும் அதன் நினைவாக அமைகின்றது. கிறிஸ்துவைத் தன்னகத்தே கொண்டு கிறிஸ்துவையே பலியாகத் தருவதின் வழியாக நற்கருணை மன்னிப்புத் தன்மை கொண்ட பலியாக மாறுகிறது. நற்கருணை வாழ்வோர்க்காகவும், இறந்தோருக்காகவும் ஒப்புக் கொடுக்கப்படுவது முறையான செயலாகும்"** என்று திரிதெந்தின் பொதுச் சங்கம் வரையறுத்துள்ளது.

**"கடவுளைப் போற்றி திருவிருந்து கிண்ணத்திலிருந்து பருகிறோமோ, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப் பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா"** (1கொரி 10:16)

மேற்கூறிய விவிலியப் பகுதி வழியாக கல்வாரிப் பலியின் பிரதிபலிப்பே நற்கருணைப் பலி என்பதை தூய பவுல் தெளிவுபடுத்துகிறார். இவ்வுண்மைதனை இரண்டாம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு எடுத்தியம்புகின்றது.

**"நம் மீட்பர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில் தமது இறுதி இராவுணவுப் பந்தியில் தம் உடல், இரத்தம் ஆகியவற்றாலான நற்கருணைப் பலியை ஏற்படுத்தினார். தாம் மீண்டும் வருமளவும் எல்லாக் காலங்களிலும் தமது சிலுவைப் பலியை நின்று நிலைக்கச் செய்தார். தம் அன்பு மணமகளாம்திருச்சபையிடம்தமது இறப்பு, உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் நினைவுச் சின்னத்தை விட்டுச் செல்லவும் இப்பலியை ஏற்படுத்தினார்" [திருவழிபாடு இல 47]**

தொடரும்...



குடும்பம் அங்கம் 93

# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.

## அன்புக்கு எதிரானவற்றை வெறுமையாக்கல்

கிறிஸ்துநாதர் மரணத்தை வென்று உயிர்த்துள்ளார். நாம் அவரது நாமத்தில் ஒற்றுமையாகும் இடத்தில் அவர் தமது பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார். அந்த இடத்தில் அவரது ஜீவன், பாதுகாப்புணர்வை எம்மால் அனுபவிக்க முடியும் என்பதை நாம் அறிவோம். இருந்தும் ஆழமான ஒற்றுமையை ஏற்படுத்த எமக்குள் பல தடைகள் உள்ளன.

எம் எல்லோருக்குள்ளும் கடந்தகால சகப்பான சம்பவங்கள் ஒற்றுமையாவதற்குத் தடையாக இருக்கின்றன. அவற்றை என்ன செய்வது? மறந்து விடவேண்டும் என்று கூறலாம். ஆனால் மறப்பவை திரும்பவும் ஞாபகத்துக்கு வருகின்றன. அப்போ என்ன செய்வது? முதலில் இறை அன்போடு தொடர்பு கொள்ள வேண்டும். அதன்பின் கடந்தகாலக் கசப்பான சம்பவங்களை வெறுமையாக்க வேண்டும். வெறுமையாக்குவது என்பது என்ன? கிறிஸ்துவை என்னில் வாழ இடம் கொடுப்பதாகும். அதாவது மனத்தாங்கல் உள்ளவரோடு மனம் விட்டுக் கதைத்து மன்னிப்புக் கொடுத்து, மன்னிப்புப் பெற வேண்டும்.

மேலும் நிலைவரம், அந்தஸ்து, வல்லமையும் ஒன்றிப்புக்குத் தடையாகலாம். இவை மனிதனுக்கு நல்லது. ஆனால் இவற்றைப் பெற்றிருப்பதால் தலைக்கணம் பிடித்து இருப்பது பிழையாகும். தலைக்கணத்திலிருந்து வெறுமையாக வேண்டும்.

மேலும் சிலருக்கு குலம், சாதி ஒரு தடையாகலாம். முற்காலத்தில் தொழிலை முன்கொண்டு சாதிப்பிரிவுகள் இருந்தன. ஆனால் இன்று தமது குலத் தொழிலையே செய்துகொண்டிராது கல்வி கற்று வேறு பல தொழில்களைச் செய்கிறார்கள். அதனால் இதிலிருந்தும் வெறுமையாக வேண்டும்.

அதுமட்டுமல்ல தனது கருத்து, அபிப்பிராயத்திலிருந்தும் சில வேளைகளில் வெறுமையாக நேரிடலாம். இருவரும் தத்தமது கருத்துக்களைச் சொல்லி அதில் யாருடைய கருத்து நல்லது என்பதை அறிந்து மற்றவர் தனது கருத்திலிருந்து வெறுமையாக வேண்டும்.

பணம், சொத்து ஒற்றுமைக்குத் தடையா? இல்லை நான் பணக்காரன் என்று எண்ணிக்கொண்டு மற்றவர்களைத் தாழ்த்தினால் அது தவறாகும். அதாவது பணப் பேராசை ஒற்றுமைக்குத் தடையாகலாம்.

மூடப்பழக்க வழக்கங்களான சாஸ்திர நம்பிக்கை, சகுனம் பார்த்தல் போன்றவைகள் ஒற்றுமைக்குத் தடையாகலாம்.

சந்தேகமும் ஒற்றுமைக்குத் தடையாகலாம். சந்தேகம் ஒரு கதவால் நுளையும்போது அன்பு, சமாதானம் மறு கதவால் வெளியேறிவிடும். ஆகவே இருவரும் மனம்விட்டுக் கதைத்து ஒருவர் மற்றவருக்குப் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டும். பிலி 2:5-8ல் கூறப்படுவது என்ன? இயேசுநாதரின் வெறுமை கூறப்படுகிறது. அவர் இறைவல்லமை, மகிமையிலிருந்து வெறுமையாகி அடிமையின் உருவம் எடுத்தார். சிலுவை மரணம் வரை தம்மைத் தாழ்த்தி கீழ்ப்படிந்தார். அவர் இறைவனாக இருந்தும் மனிதனோடு உறவு கொள்ள தேவ உரிமையிலிருந்து வெறுமையாகி துன்பப்படும் ஊழியனாக மாறினார்.

ஆகவே நாமும் வெறுமையைப் பயிற்சி செய்ய வேண்டும். நான் எதிலிருந்து வெறுமையாக வேண்டும் என்று தேடிப்பார்த்து அதிலிருந்து வெறுமையாகுவோம்.

**தொடரும்...**

## நல்லவர் சூசையின் நான்கு கனவுகள்



இருமனங்களின்
திருமணமும் ஒப்பந்-
தத்தால் கலந்தது.
இடையிலேயொரு புதுக்
குழப்பம் எதிர்பாரா
தெழுந்தது.
இறைவனாரின்
திருமகனை கன்னிமரி
சுமந்தது. இணையாளர்
சூசைக்கன்று அதிர்ச்-
சியாக அமைந்தது.

இல்லறத்தில் கூடாமல்
இது எப்படி நிகழ்ந்தது?
இரகசியமாய் இந்த
எண்ணம் மனதுக்குள்ளே
குமைந்தது.
மனையாளை விலக்கிவிட
சூசை மனம் துணிந்தது.
கனவினிலே தூதர் பேசும்
அதிசயமும் நடந்தது.

தூய்மை மிக்க மரியின்
கரு தூய ஆவி
நிறைந்தது. திருக்குமரன்
இயேசுபிரான் மண்ணு-
லுதிக்க புலர்ந்தது.
ஏற்றுக்கொள் மரியாளை
என்று கனவு பகர்ந்தது
சூசை இதயம் ஐயம-
கன்று பனியெனவே
தெளிந்தது.

ஏரோதின் வஞ்சமனம்
குழந்தையைக் கொல்ல
நினைத்தது இதையறியா
ஞானியர் குழு
இயேசுவைக் கண்டு
பணிந்தது. எச்சரிக்கை
அவர்களுக்கும் கனவிலே
தான் மலர்ந்தது
ஏரோதிடம் திரும்பிப்
போகும் எண்ணம்
அவர்க்கு கலைந்தது.

தாய் சேயை அழைத்துக்
கொண்டு தப்பிச்
செல்லல் சிறந்தது
நான் சொல்லும்
வரை எகிப்தினிலே
தலைமறைவே உகந்தது
- என தூதர் கனவில்
உரைத்தமையால்
சூசைக்குண்மை
தெரிந்தது துர்புத்தி
ஏரோதுவின் சதித்
திட்டமும் புரிந்தது.

இயேசு மரி சூசையென
திருக்குடும்பமாய்
இணைந்தது. எகிப்துக்கு
இரகசியமாய் ஓடும்
நிலை விளைந்தது
கனவில் பெற்ற
உத்தரவால்
பெத்லகேமைக் கடந்தது
கடவுள் மகனைக்
காப்பதற்கு எகிப்துக்-
குள்ளே நுழைந்தது

எகிப்து நாட்டில்
தலைமறைவாய் குடும்ப
வாழ்க்கை தொடர்ந்தது
ஏரோதரசன் மறைவின்
பின்னே சூசையின்
கனவு வளர்ந்தது.
கொல்லத் தேடிய
கொடியோர் கூட்டம்
மரணம் பெற்று மடிந்தது.
இஸ்ரயேலுக்குத்
திரும்பிச் செல்ல இந்தக்
காலம் உகந்தது -
என்று

கனவில் தூதர்
கூறக்கேட்ட குடும்பம்
இஸ்ரயேல் அடைந்தது
- ஆங்கே கொல்லத்
தேடிய ஏரோதின் மகன்
அரசனாக அமர்ந்தது
கேள்விப்பட்ட சூசை...

தொடர்ச்சி 15ம் பக்கம்

## தமிழினதும், கிறிஸ்தவத்தினதும் பக்திப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியே இன்றைய கிறிஸ்தவ இறுவட்டுக்கள்

– அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் –

தமிழ் இலக்கியப் பக்திப் பாரம்பரியத்தினதும் கிறிஸ்தவ இலக்கியப் பக்திப் பாரம்பரியத்தினதும் தொடர்ச்சியாகவே இன்றைய கிறிஸ்தவப் பாடல் இறுவட்டுக்களை நாம் நோக்கவேண்டும். தமிழ் இலக்கியத்திலே "அம்மையே அப்பனே ஒப்பிலா மணியே!" என்று இறைவனைப் பாடிப் பரவசப்படுகின்றோம். கிறிஸ்தவத்தில் "என் கோட்டையே, அரணே, எனக்குப் புகலிடம் நீரே" என்று இறைவனை வேண்டுதல் செய்கின்றோம். இவ்வாறு தமிழ் மொழியின் பக்தி இலக்கியப் பின்னணியில் நின்றும், கிறிஸ்தவ சமயத்தின் பக்தி இலக்கியப் பின்னணயில் நின்றும் நோக்கும்போது பக்தி அனுபவம் அல்லது இறை அனுபவம் என்பது ஒன்றாகவே உள்ளது என அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையரங்கத்தில் இம்மாதம் 22ஆம் திகதி (22.02.2015) இடம்பெற்ற கலாபூசணம், இசைத்தென்றல் ம. யேசுதாசன் அவர்களின் கிறிஸ்தவப் பாடல்கள் இறுவட்டு வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டச் சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் இயக்குனரும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், "மன்னா" என்ற கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான தமிழ் நேசன் அடிகளார் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது;

உலகத்திலே ஆறாயிரத்திற்கும் அதிகமான மொழிகள் உண்டு. எல்லாருக்கும் எல்லா மொழிகளும் தெரிய வாய்ப்பு இல்லை. ஆனால் எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய பொதுவான ஒரு மொழி உண்டு என்றால் அது இசை என்னும் மொழி ஆகும். அதனால்தான் இசையை உலகப் பொது மொழி என்கின்றார்கள் "இசைகேட்டாடல் புவி அசைந்தாடும் இறைவன் அருளாலே!" என்றும், "இசையால் வசமாகா இதயமுண்டோ?" போன்ற வரிகள் இசையின் வலிமையை, ஆற்றலை எடுத்துக்காட்டுகின்ற வார்த்தைகளாக உள்ளன.

தமிழ் மொழி வளர்ச்சிக்காக உழைத்த பெரியார்களில் முக்கியமான ஒருவராகக் கணிக்கப்படுகின்ற நமது நாட்டைச் சேர்ந்த தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் பன்மொழி வல்லுனராக விளங்கினார். அவர் பல மொழிகளைப் படித்து, அறிந்து, ஆய்வுசெய்து பின்னர் ஒரு முடிவுக்கு வந்து சொன்னார். உலகில் உள்ள எல்லா மொழிகளையும்விட தமிழ் மொழியில்தான் பக்தி இலக்கியங்கள் விரவிக் கிடக்கின்றன என்று சொன்னார். ஆம் நம் தாய்மொழியாம் "தமிழ் பக்தியின் மொழி" என்று கூறி, பரவசப்பட்டார் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்.

தமிழ் மொழி பல்வேறு சமயங்களினால் வளம் பெற்ற ஒரு மொழி. சைவம், பௌத்தம், வைணவம், சமணம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற சமயங்களினால் தமிழ் வளம்பெற்றுள்ளது. அதேபோன்று சமயங்களும் இந்தத் தமிழ் மொழியினால் வளம்பெற்றுள்ளன. ஆகவே சமயங்கள் தமிழை வளர்த்தன. தமிழ் சமயங்களை வளர்த்தது எனலாம். சைவ சமயத்திலே நாயன்மார்களின் திருமுறைகள், வைணவ சமயத்திலே ஆழ்வார்களின் நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் போன்றவை தமிழ் வளத்துடனும் கலை நயத்துடனும் பாடப்பட்டவை. இதேபோன்று இஸ்லாமிய இலக்கியமான சீறாப்புராணம், கிறிஸ்தவ இலக்கியமான தேம்பாவணி போன்ற இலக்கியங்கள் தமிழின் பக்திச் சுவைக்கு சான்றாக உள்ளன.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# ஞாயிறு சிந்தனை

பேதுரு



## தவக்காலத்தின் 4வது ஞாயிறு 15.03.2015

**வாசக விளக்கம்:** நமது தந்தையாம் கடவுளின் அன்பின் வெளிப்பாடுதான் இயேசு. அதன் உச்சக் கட்டம்தான் சிலுவைச்சாவு. இயேசுவை விசுவாசக் கண் கொண்டு உற்று நோக்கினால் மகிழ்ச்சி அடைவோம் வெட்கத்தால் தலை குனிய மாட்டோம். பாவ வாழ்க்கை வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் பாம்பினால் கடியுற்றபோது வெண்கலப் பாம்பை உற்று நோக்கி நலம் பெற்றது போன்று, இயேசுவும் மானிடகுலத்தை மீட்க சிலுவையில் உயர்த்தப்பட வேண்டும் என தன் பாடுகளை முன்னறிவிக்கின்றார். இன்றைய நவீன உலகில் வாழும் மனிதன் தன் குடும்பம், தன் தொழில், தன் பிரச்சினை என்ற தனிமையான வாழ்வையே வாழ விரும்புகின்றான் தன்னைத் தனிமைப் படுத்தி ஒருவகையான இருளில் வாழவே விரும்புகிறான். இத்தகைய இருளை நீக்கி ஒளியாம் இயேசுவை பின்பற்றி வாழ நாம் அழைக்கப்படுகின்றோம். ஒளியாம் இயேசுவை உற்றுநோக்கி அவரது அளவிட முடியாத அன்பை, அமைதியை விடுதலையை மகிழ்ச்சியை மன நிறைவை பெற்று வாழ இத்தவக் காலத்தில் முயற்றி செய்வோம் இதற்கு வேண்டிய அருளைப் பெற்றிடத் தொடரும் பலியில் கருத்தாய் பங்குகொள்வோம்.

**முதல் வாசகம் :** 2 குறிப்பேடு 36:14-16, 19-23

ஆண்டவரின் சினமும் இரக்கமும், மக்கள் நாடு கடத்தப்படுதலிலும், அவர்கள் மீட்கப் பெறுவதிலும் வெளியாகின்றன.

**பதிலுரைப்பாடல் :** உன்னை நான் நினையாவிடில் என் நா மேல் வாயோடு ஒட்டிக்கொள்வதாக.

**இரண்டாம் வாசகம் :** எபேசியர் 2:4-10

குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்.

**நற்செய்தி :** யோவான் 3:14-21

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஒளியாம் இறையை நோக்கி தன் மக்களை வழிநடத்தும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் யாவரும் நிலை வாழ்வின் வழிகாட்டிகளாக என்றும் வாழ்ந்திடத் தேவையான வரங்களை தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் மக்கள் மீது செலுத்தப்படும் அதிகாரங்கள் அன்பின் அதிகாரமாகவும், பணி வாழ்வின் அதிகாரமாகவும் மாறவும், நாட்டைச் சூழ்ந்துள்ள இருள் போன்ற தீமைகளை அகற்ற தமது அர்ப்பண வாழ்வால் பணிபுரியவும் வேண்டிய நல் மனதை தந்தருள வேண்டுமென்று...

தவக்காலத்தை அனுசரிக்கும் நாம் அனைவரும் திருவிவிலியத்தை அடிக்கடி விசுவாசத்துடன் வாசிக்கவும், தினமும் செபமாலை சொல்லும் பழக்கத்தை பின்பற்றவும் எமது சிந்தனை, சொல், செயல், உறவுகளில் எப்பொழுதும் தூய்மையைக் கடைப்பிடிக்கவும் உண்மையான ஒளியாம் இயேசுவை பின்பற்றி வாழவும் வரமருள வேண்டுமென்று...

## தவக்காலத்தின் 5வது ஞாயிறு 22.03.2015

**வாசக விளக்கம்:** கடவுள் இஸ்ராயேல் மக்களுடன் செய்து கொண்ட பழைய உடன்படிக்கை பற்றியும் புதிய உடன்படிக்கை பற்றியும் இன்றைய முதல் வாசகம் பேசுகின்றது புதிய உடன்படிக்கையின் படி மன்னிப்பும் பாவ வாழ்விலிருந்து விடுதலையையும் கடவுள் வழங்குகிறார். தலைமைக் குரு என்றால் யார் என விளக்கும் இரண்டாம் வாசகம், இறைமகன் இயேசுவை முழுமையான தலைமைக் குருவாக படம் பிடித்துக் காட்டுகின்றது. நற்செய்தியில் இயேசு தன் வாழ்க்கையை கோதுமை மணிக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார். அது எவ்வாறு நிலத்தில் விழுந்து மீண்டும் உயிர்பெற்று பயிராகின்றதோ அதுபோல் இறைமகன் இயேசுவும் இறந்து உயிர் பெறுவார் எனக் கூறுவதைப் பார்க்கின்றோம் நிலைவாழ்வு என்ற மாட்சியை அடைய நாமும் நமக்கென்று வாழாது கடவுளை மாட்சிமைப்படுத்தி வாழ வேண்டும். குட்டித் திருச்சபையாக விளங்கும்போது எமது குடும்பங்களும் குடும்பத்திலுள்ள உண்மைகளை நல்ல பண்புகளை சான்று பகர வேண்டும். இதற்கு எம் சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் மாற்றங்கள் நிகழ வேண்டும் இதற்கு வேண்டிய அருளைத்தருமாறு இறைத்தந்தையிடம் மன்றாடுவோமாக.

**முதல் வாசகம் :** எரேமியா 31:31-34

புதிய உடன்படிக்கை செய்து கொள்வேன். பாவங்களை நினைவு கூரமாட்டேன்

**பதிலுரைப்பாடல் :** கடவுளே தூயதோர் உள்ளத்தை எனக்குள்ளே படைத்தருளும்.

**இரண்டாம் வாசகம் :** எபிரேயர் 5:7-9

கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின் பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர்" என்கிறார் ஆண்டவர்.

**நற்செய்தி :** யோவான் 12:20-35

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

சாதி, மத, இன வேடுபாடுகளின்றி கடவுள் அன்பாய் இருக்கிறார் என்ற நற்செய்தியை உலகமெங்கும் பறைசாற்றும் தூய திருச்சபையையும் திருத்தந்தை பிரான்சிஸ் ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கும் உமது அன்பின் ஆசீரை அளித்து வழிநடத்தியருள வேண்டுமென்று...

எமது நாட்டின் தலைவர்களும், அதிகாரிகளும், நல்லவர்களாக வாழ்வதன் மூலமே நாட்டை முன்னேற்ற முடியும் என்பதை உணரவும், மக்கள் மையப்படுத்தப்பட்ட பணிகளை முன்னெடுக்கவும் ஏழை எளியோர் வாழ்வு நிலை உயரவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்க பாடுபடவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று.

இயேசுவின் நற்செய்திப்பணிக்காக எம்மால் இயன்ற உதவிகள் புரியவும், நற்செய்திப் பணியின் அடித்தளம் செபம் என்பதை உணர்ந்து நாம் செபத்தில் நிலைத்திருக்கவும் தான், எனது என்ற சுயநல உறவுகளை விடுத்து பொது நலம் பேணவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று....

## ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு 29.03.2015

**வாசக விளக்கம்:** இன்றைய வாசகமானது கடவுளின் ஊழியர் கடவுளின் சித்தத்தை ஏற்று அவருக்கு கீழ்ப்படிந்து நடப்பார் என்றும் அவர் துன்பங்களை ஏற்று கடவுளின் மாட்சிமையை தன்னுடைய உயிர்ப்பின் மூலம் வெளிப்படுத்துவார் என்றும் கூறுகின்றது. பிலிப்பி நகர மக்களை தூய பவுல் அடியார் தூய ஆவியின் கொடைகளைப் பகிர்ந்து இரக்கமும் பரிவும் அன்பும் கொண்டு வாழ அழைப்பு விடுப்பதை இரண்டாம் வாசகம் விளக்குகின்றது. நற்செய்தியில் இயேசு எருசலேமிற்குள் நுழைந்தபோது மிகப்பெரிய மக்கள் கூட்டம் அவரை எதிர்கொண்டு வரவேற்றது. "ஓசான்னா தாவீது அரசனின் மகன் வாழ்க" என்று கூக்குரலிட்டார்கள். இது வரவேற்பின் புகழ்ச்சிக் கீதமாக அமைகின்றது. இந்த வெற்றியின் நுழைவு ஓசான்னா புகழ்ச்சி சிலுவையில் அறையும் என்று மாறும் என்பதையும் முள் முடி அரச கீரிடமாகவும், சிலுவையாகவும் மாறும் என்பதையும் இயேசு அறிந்திருந்தார். வழியில் விரிக்கப்பட்ட துணிகள் பெரிய வெள்ளி அன்று அவர் உடம்பு முழுவதும் வெறுமையாக்கப்படும் என்பதையும் ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் அவற்றிற்கு புதிய விளக்கத்தையும் பொருளையும் கொடுக்கின்றார். சிலுவை புதிய அர்த்தம் பெற்றது போல் நாம் நமது துன்பங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் நமக்கும் புதிய அர்த்தத்தை கொடுக்கின்றது.

**முதல் வாசகம் :** எசாயா 50:4-7

நிந்தனை செய்வோருக்கு என் முகத்தை மறைக்கவில்லை இழி நிலையை நான் அடைவதில்லை என்று அறிவேன்.

**பதிலுரைப்பாடல் :** என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்

**இரண்டாம் வாசகம் :** பிலிப் 2:6-11

கிறிஸ்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் கிறிஸ்துவை உயர்த்தினார்

**நற்செய்திக்கு முன் வசனம் :**

சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

**நற்செய்தி :** மாற் 14:1-15,47

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறை நினைவு கூரும் நாம் எமது தாய்த்திருச்சபைக்காக மன்றாடுவோம். எவ்வகை துன்பங்களையும் ஏற்று மக்களின் நிலைவாழ்விற்காக அயராது உழைக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கும் வேண்டிய துணிவையும் மனத்தைரியத்தையும் அளித்தருள வேண்டுமென்று...

நாம் வாழுகின்ற எமது நாட்டிற்காக மன்றாடுவோம் எமது நாட்டின் தலைவர்களும் மக்களும் ஆளுக்கும் நாளுக்கும் தகுந்தாற் போன்று கொள்கைகளையும் விசுவாசத்தையும் மாற்றிக் கெள்ளாமல் அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சமாதானம் என்பனவற்றை பின்பற்றி வாழவும் வேண்டிய துணிவைத் தந்தருள வேண்டுமென்று

பல்வேறு துன்பங்களால் பாதிக்கப்படும் நம் அனைவருக்காகவும் மன்றாடுவோம். பிறர் துன்பத்தில் குளிர் காய்வதை விட்டு விட்டு பிறரின் துன்பங்களை கண்டு துடிக்கும் உள்ளம் கொண்டவர்களாகவும் பிறரின் துன்பத்தில் முழுமையாக பங்குகொள்ளும் மனப்பாங்கு கொண்டவர்களாகவும் துன்பம் இன்றி இன்பம் இல்லை என்பதை உணர்ந்து பொறுமையுடன் துன்பங்களை ஏற்று வாழவும் வரமருள வேண்டுமென்று

## திருச்சிலுவை ஓர் அடையாளம் அல்ல, நம் பாவங்களைத் தம்மீது சுமந்த இறைவனின் பேருண்மை



திருச்சிலுவை ஓர் அலங்காரப் பொருள் அல்ல இது நம்மை பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் அடையாளமும் அல்ல. மாறாக இது நம் பாவங்களை தம்மீது சுமந்து. தம்மையே தாழ்த்திய இறைவனின் பேருண்மை. திருச்சிலுவை கோட்பாடு அல்ல. இது உயிர் வாழ்வதற்கு அல்லது கல்விக்கு அல்லது அமைதியை ஏற்படுத்துவதற்கான திட்டம் அல்ல. மாறாக கிறிஸ்தவம். சிலுவையில் உயர்த்தப்பட்ட நம்மை மீட்பதற்கான தம்மையே நிர்மூலமாக்கிய ஒரு மனிதனுடையது

திருத்தந்தை பிரான்சிஸ்

## திருத்தந்தையின் பொன்மொழிகள்

- இதயம் அன்பு செலுத்தாதபோது அது கடினமாகின்றது. ஆண்டவரே அன்பு செலுத்த திறந்த இதயத்தை எங்களுக்கு அளித்தரும்
- நன்மை செய்ய கற்றுக்கொண்டவரை கடவுள் தாராளமாக மன்னிக்கின்றார்.
- அநீதிகளை மறைப்பதற்கு கடவுளை ஒரு போதும் பயன்படுத்தாதீர்கள்.
- ஓய்வின்றி தேடும் இதயங்கள் கடவுளைக் கண்டுகொள்ளும்.





# குருத்து ஞாயிறு



## “என்னை அனுப்பினவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதே எனது பணி”

எனது வாழ்க்கையில் என்ன நடந்தாலும், எது நடந்தாலும், எப்படி நடந்தாலும் தந்தையின் விருப்பப்படி தான் நடக்கிறது என்பதை உணர்ந்து அவரின் திருவுளத்திற்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து வாழும் வாழ்வு தான் விசுவாச வாழ்வு. அப்படிப்பட்ட விசுவாச வாழ்வை வாழ்ந்து காட்டிய இயேசுவின் ஆடம்பர எருசலேம் நுழைவு விழாவைத் தான் குருத்து ஞாயிறு விழாவாகக் கொண்டாடுகின்றோம்.

புனித வாரத்தின் நுழைவாயில் குருத்து ஞாயிறு. தவக்காலத்தின் உச்சக்கட்டம். திருப்பாடுகளின் தொடக்கம். திருச்சபையின் வரலாற்றில் ஒரு வாரமே புனித வாரமாகக் கொண்டாடப்படுகிறது. என்றால் கிறிஸ்துவின் பிறப்பை விட அவரது பாடுகளும், இறப்பும், உயிர்ப்பும் எவ்வளவு முக்கியம் என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவரும் அறிந்திருக்க வேண்டும்.

கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிநாதமான கெரிக்மா என்றழைக்கப்படும். இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு இவ்வாரத்தில் ஆழமாக நினைவுக் கூறப்படுகின்றது.

## இயேசுவின் பயணங்கள்

பெத்லகேமில் ஏரோதுவின் மிரட்டலுக்கும், அதிகாரத்திற்கும், பணிந்து எகிப்துக்கு தப்பியோடி, இறுதியாக நாசரேத்தூரில் குடியமர்ந்தது வரை கிறிஸ்து மேற்கொண்டது. வாழ்க்கைப் பயணம். பன்னிரு வயதில் எருசலேம் ஆலயத்தில் காணாமற் போனதோடு அவரது வாழ்க்கைப் பயணம் முடிவுக்கு வருகிறது. அவர் தனது திருக்குடும்பத்துடன் மேற்கொண்ட பயணம்.

பாலைவனத்திற்கு மேற்கொண்டது 2வது பயணம். தனது இறையரசின் பணிக்கான பயணம். இது சீடர்கள், அப்போஸ்தலர்கள், புடைசூழ நடைபெற்ற இறையாட்சிக்கான பயணம் கலிலேயா, யூதேயா, சமாரியா என எப்பக்கமும் விரிவடைந்த பயணம்.

மூன்றாவதாக : எருசலேமிற்குள்ளான பயணம். இப்பயணம் பலர் வாழ்வு பெறுவதற்காக தம்மையே தந்தையின் திருவுளத்திற்கு கையளிப்பதற்கான மரணப் பயணம். பலியான பயணம். தனியொரு விதையாக வீரியமுடன் மேற்கொள்கிற பயணம். இது கல்வாரியில் தான் முடிவடையும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தவர் இது ஒரு புனிதமான பயணம்.

இயேசுவின் முதல் பயணம் நாட்டிற்கு வெளியே, இரண்டாவது பயணம் நாட்டிற்குள்ளே, மூன்றாவது பயணம் கல்லறைக்குள்ளே. இன்று எருசலேமில் குழுமியிருந்த மக்களின் கைகளில் குருத்தோலைகள் என்றால் நம் தோளில் சிலுவை தான். பயணத்தின் தரைகளில் துணி என்றால் பாடுகளின் போது நிர்வாணம்.

இன்று ஓசான்னா என்றால் நாளை முள் முடியும் கசையடியும் என்பதை அவர் நன்கறிந்திருந்தார். ஆனாலும் மானுடத்தை மீட்க தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற அனைவருக்கும் நிறை வாழ்வினை வழங்க பாடுகளின் பாதையை ஓர் இலட்சிய பாதையாக மேற்கொள்கிறார். இந்தப் பாதைக்கான முதல் படிதான் குருத்து ஞாயிறு.

- ஒவ்வொருவரின் துயரத்தில் பங்கெடுக்காமல் எனக்கென்ன என்று தூங்கி சுகம் காண்பவர்களும் மாற் 14:32-43
- முப்பது வெள்ளிக்காசுக்கு முத்தமிட்டு காட்டி கொடுப்பவர்களும்
- அவரை எனக்கு தெரியாது என்று மறுதலிப்பவர்களும்
- தங்கள் மேலாடையைப் பற்றிக் கூட கவலைப்படாமல் தப்பித்தால் போதும் என்று ஓடும் சீடர்களும்
- அவரை நிர்வாணப்படுத்தியே தீர வேண்டும் என்பதற்காக தங்கள் மேலாடையைக் கிழித்துக் கொண்டவர்களும்
- முகத்தை மூடி நையப்புடைத்து, அடித்து “உன்னை அடித்தவன் யார்?” என்று பரிகாசம் செய்பவர்களும்
- பளபளப்பான ஆடை உடுத்தி பரிகாசம் செய்பவர்களும்.
- பரபாசே வேண்டும் என்று பாசாங்கு செய்பவர்களும்
- சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூவுபவர்களும்
- காரி உழிழ்பவர்களும்
- கன்னத்தில் அறைபவர்களும்
- கசையால் அடிப்பவர்களும்
- யூதரின் அரசே வாழி என்று ஏளனம் செய்பவர்களும்
- கைகளை கழுபவர்களும்
- உன்னையே காப்பாற்றிக் கொள் என்று நகைப்பவர்களும்

## கழுதை மேல் ப

பலஸ்தீனா நாட்டில் கழுதைக்கு சிறப்பான முக்கியத்துவம் உண்டு. போர்க்காலங்களில் அரச
குதிரைகளை பயன்படுத்திய அரசர்கள் போர் முடிந்து ஊழி
அமைதியான நாட்களிலே கழுதை மீது பவனி வரு
வந்தார்கள் கழுதை அமைதி சாந்தம் சமாதானத்தின் கழு
சின்னம்

# ஒலிவக் கிளைகள்



ாவா காலத்து
வெள்ளப்பெருக்கு,
மியின் முகத்தைப்
புப்பித்து
ப்படைப்பாக
னைத்தையும்,
நமாற்றியது. இனி
ழிவு இல்லை என்ற
பிக்கையை கொண்டு
ந்த புறா ஒலிவ
த்தின் கிளை ஒன்றை
லகில் கௌவிக்
ாண்டு வந்தது.
தா.நூ 8:11)
அழுகைக்கும்,
ழிவிற்கும்
ட்பட்டிருந்த படைப்பு
ி விடுதலைக்கு
கடந்து செல்ல
இதோ இயேசுவின்
தலைமையில்
புறப்பட்டுவிட்டது
என்ற நம்பிக்கையை
முழக்கமிடும் பவனி
இது.
ஒலிவ
மரம் தேவர்களும்,
மனிதர்களும்
பயன்படுத்தும்
செழுமையான மரம்.
இறையரசின் செழுமை,
வளமை, முழுமையை
முன்னறிவிக்கிறது.
உயிர்ப்பு விழாவுக்கு
முன் ஒரு விழா

## குருத்தோலை

வெற்றியின் அடையாளம், ஆதிக்கிறிஸ்தவர்கள் கல்லறைகளில் குருத்தோலையை வைத்தனர் எதற்காக? கிறிஸ்து சாவின் மீது வெற்றிக் கொண்டு உயிர்த்தது போல, இவர்களும் உயிர்க்கப்பட வேண்டும் என்பதற்கான அடையாளமாகத்தான் குருத்தோலை உயர்ந்து நிற்பது போல, நம் இதயங்களும், எண்ணங்களும், உயரணும் என்பதை வெளிப்படுத்தத்தான் குருத்தோலை பவனி






- கசந்த திராட்சை இரசத்தை குடிக்கச் சொல்லிட கட்டாயப்படுத்துபவர்களும்
- ஒரு மனிதனின் நிர்வாணத்தைப் பற்றி கவலைப்படாமல் அவனது ஆடையை குலுக்கல் போட்டு பங்கிட்டுக் கொள்ளும் சுயநலக்காரர்களும்
- சிலுவையில் அறைபவர்களும்
- நீ மெசியா என்றால் உன்னையும், எங்களையும் காப்பாற்று என பழித்துரைப்பவர்களும்
- இறந்த பிறகும் விலாவில் ஊடுருவக் குத்துபவர்களும்
- கையூட்டுக் கொடுத்து தவறான பரப்புரையை மேற்கொள்பவர்களும், இவர்களை இயேசு தனது பயணத்தில் சந்தித்தார். இவர்களெல்லாரும் சூளையை மறுக்கும் செங்கற்கள்.

இவர்கள் மட்டுமல்ல இயேசுவின் பயணத்தில் சொற்ப எண்ணிக்கையாளர்கள் அவரை ஆதரிப்பவர்களாகவும், துணை நிற்பவர்களாகவும் இருந்தார்கள்.

- இதோ உமது அடிமை என்று இறுதிவரை நின்ற அன்னை மரியா
- கட்டாயப்படுத்தப்பட்டதால் இறுதிவரை சிலுவை சுமந்த சீமோன்
- அநீதியைக் கண்டு, மாரடித்துப் புலம்பிட ஒப்பியவர் குரலெழுப்பிய பெண்கள்
- என்னை நினைவிற் கொள்ளும் என்று சரணாகதி அடையும் நல்ல கள்வன்.
- இம்மனிதர் உண்மையாகவே இறைமகன் என்று விசுவாசத்தை வெளிப்படுத்தும். நூற்றுவத் தலைவன்
- புதிய கல்லறையை தியாகம் செய்த அரிமத்தியா சூசை
- வெள்ளைப் போளமும் சந்தனத் குமிழும் கொணர்ந்த நிக்கதேமு
- மகதலா மரியா, மரியா, சலோமி என ஒரு சில பெண்கள் (நறுமணப் பொருட்கள் பூசியவர்கள்)

இவர்கள் எல்லோரும் இயேசு செய்த மூன்றாவது பயணமாக மரணப் பயணத்தில் சந்தித்தவர்கள். இவை எல்லாவற்றையும் அனுசரிக்கத்தான் முதல் படியாக இயேசு எருசலேமுக்குள் நுழைகிறார்.

## ...வனி

இயேசு சாந்தத்தின் உருவாக அமைதியின் ...ராக, சமாதானத்தின் தூதுவராக துன்புறும் ...யெனாக தம்மையே தாழ்த்தி அரச பவனி ...கிறார். எளிமையும் சாந்தமும் நிறைந்த அரசராக ...தையில் மீது அமர்ந்து எருசலேம் வருகிறார்.

இந்நிகழ்வுகள் யாவும் புனித காலத்தில் நடந்து முடிகிற அம்சங்களாகும். ஆகவே இந்த புனித வாரம் நிகழ்வுகள் அவரின் பயணத்தில் நமது வாழ்விற்கான சுவடுகளாக பதிந்திருக்கின்றன.

## பயணமே வாழ்க்கை

வாழ்க்கை என்பது எப்போதுமே பயணத்தால் ஆனாது. பிறப்பதற்கு முன்பிருந்து இறந்த பிறகு வரை நாம் ஒவ்வொருவரும் பயணம் செய்கிறோம். இப்பயணம் போராட்டத்தால் சூழ்ந்தது.

- இவ்வாழ்க்கைப் பயணத்தில் ஆதரிப்பவர்களைவிட எதிர்பார்ப்பவர்கள் தான் அதிகம்
- பாராட்டுபவர்களை விட விமர்சிப்பவர்கள் தான் அதிகம்
- அன்பு செய்பவர்களைவிட, பகைமையை வளர்ப்பவர்கள் தான் அதிகம்.
- சமாதானத்தை ஏற்படுத்துபவர்களை விட சண்டை மூட்டுபவர்கள் தான் அதிகம்
- உண்மைக்காக உழைப்பவர்களைவிட ஏமாற்றி பிழைப்பவர்கள் தான் அதிகம்
- இயல்பாக இருப்பவர்களை விட நடிப்பவர்கள் தான் அதிகம்
- சேவை செய்பவர்களை விட அந்தப் பெயரில் சேர்ந்து வைப்பவர்கள் தான் அதிகம்.

இதை ஒவ்வொரு கிறிஸ்தவனும், உணர்ந்து வாழ்ந்தால் இயேசு வாழ்ந்த இலட்சியப் பயணத்தை நாமும் தொடரலாம். பெரிய வெள்ளி இல்லாமல் உயிர்ப்பு ஞாயிறு இல்லை. துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை.

**இதைத்தான் புனித வாரம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.**








# புனித இருபத்தி மூன்றாம் ஜோன்

4

## எட்டாக் கனியா கல்வி?

“கல்வி கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே மேல்” என்றார் பிளேட்டோ. கல்வி வாழ்வின் மூலதனம், மாற்றுக் கருத்தில்லை. ஆனால் வணிகமயமாக்கப்பட்ட கல்வியால் ஏழைகள் படும் அவலத்தை என்னவென்பது. கல்விச் சந்தையில் போட்டியிட முடியாமல் கானல் நீராகிவிட்ட ஏழை மாணவர்களின் கனவுகளை என்ன செய்வது?

இன்றளவும் நம் நாட்டில் அநேகம் பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய், அதற்குரிய வாய்ப்புக்களைப் பெறாதவர்களாய் இருக்கிறார்கள். என்ன கஷ்டப்பட்டாவது என் பிள்ளையை நான் படிக்க வைப்பேன். நான்தான் படிக்காதவன் (ள்) என் பிள்ளையாவது படித்து நல்ல நிலைக்கு வரட்டும் என்று ஏங்கும் பெற்றோர்கள் ஏராளம். இந்த ஏக்கம்கூட ஆஞ்சலோவி குடும்பத்திற்குச் சாத்தியமில்லாத ஒன்றாகவே இருந்தது. குடும்ப ஏழ்மை, கல்வி பெறுவதற்கு ஒரு தடங்கலாகவே அமைந்தது.

எழுதப் படிக்கத் தெரியாதவனாக, தங்கள் மகன் மாறிவிடக்கூடாது. ஆகவே தொடக்க கல்வியைக் கொடுத்த பின் அவனைப் பரம்பரைத் தொழிலான விவசாயத்தில் சேர்த்து விடலாம் என்று பெற்றோர் கலந்துரையாடி பள்ளியில் ஆஞ்சலோவைச் சேர்க்க முடிவெடுத்தனர். 6வயது நடக்கையில் ஆஞ்சலோ தன் சொந்த ஊரிலிருந்த பள்ளிக்கூடத்தில் தொடக்கக் கல்வி பயில சேர்க்கப்பட்டார்.

### விளையும் பயிர் முறையிலே தெரியும்

வாழ்க்கைக் கல்வி, வாழ்க்கை மூலம் கல்வி, வாழ்க்கை முழுவதும் கல்வி என்பது போன்றே ஆஞ்சலோவின் கற்றல் திறனும் செயல்பாடும் தொடக்கத்திலேயே அமைந்திருந்தன. பட்டென்று சந்தேகங்களை எழுப்பும் பாங்கு, தன் மழலைக் குரலால் ஆசிரியரின் கேள்விகளுக்கு சட்டென்று பதில் சொல்லும் ஆற்றல், புரியாததைப் புரிந்துகொள்ள மேற்கொள்ளும் முயற்சி, அறியாதவற்றை அறிந்து கொள்ள செலவிடும் ஆற்றல் அந்தக் கிராமத்தையே மெய்சிலிர்க்க வைத்தது. சுருங்கக் கூறின் இயற்கையிலே ஆஞ்சலோ அறிவாற்றல் திறன், படைப்பாற்றல் திறன் மிகுந்தவராகத் திகழ்ந்தார்.

ஒரே ஆசிரியர் மூன்று வகுப்பறைகள் கொண்ட சூழலில் கல்வி பயின்ற ஆஞ்சலோ, மூன்று வகுப்புக்களிலும் தேர்ச்சிப் பெற்றார். பின் செலானா என்ற ஊரிலிருந்த கல்விக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். செலானா என்னும் ஊர் ஸோத்தோ இல் மோந்தேயிலிருந்து தொலைவில் இருந்தது. இன்றுபோல் போக்குவரத்து வசதிகள் அன்றில்லை. எனவே போன்றிடா என்ற கிராமம் செலானாவிற்கு அருகில் இருந்தமையால் அங்குள்ள உறவினர் வீட்டில் நான்கு மணிநேரம் நடந்து சென்று கல்வி பயில்வது ஆஞ்சலோவுக்கு சிரமமாகவே இருந்தது. இதனால் நன்குப் படிக்கும் மாணவன் படிக்கப் போதிய நேரம் கிடைக்காததால் குறைந்த மதிப்பெண்களையே பெற்றார். ஒவ்வொரு நாளும் இரண்டு மணிநேரம் நடந்து சென்று இலத்தீன் மொழி படித்தார். இவ்வாறு கல்வி கற்றுக் கொண்டிருக்கும் வேளையில் தன் இலட்சியத்தைத் தேர்ந்து தெளியும் நேரம் வந்தது.

**தொடரும்...**

சிறுவர்களே! இது உங்கள் பகுதி. இப்பகுதியில் நீங்களும் இணைந்து கொள்ள விரும்பினால் கீழ் காணும் முகவரியில் உங்களது ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். விரும்பினால் நேரில் கொண்டுவந்தும் கொடுக்கலாம்.

முகவரி

ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, கொழும்பு - 08.



ஆன் சான்றா கஜித்தன், தரம் 1,



அனிக்கா விக்டோரியா, தரம் 5A,
திருக்குடும்ப கன்னியர் பாடசாலை, பம்பிலப்பிட்டி



## கொடுக்கக் கொடுக்கத்தான் கிடைக்கும்

மகாகவி பாரதியார் கடையத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்தபோது, அவரது உடையைப் பார்த்து பரிதாபப்பட்ட அந்த வீட்டு உரிமையாளர், பாரதியாருக்கு, ஒரு புதிய பத்து முழ வேட்டியையும், ஆறு முழத் துண்டையும் கொடுத்து உடுத்திக்கொள்ளச் சொன்னார். பாரதியாரும் அவற்றை வாங்கி உடுத்திக் கொண்டு உற்சாகமாக வெளியே வந்தார். அப்போது தெருவில் ஓர் ஏழை போர்த்திக்கொள்ள துணியின்றி, குளிரில் நடுங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த பாரதியார் மனமிரங்கி உடனே தனது துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, வேட்டியை அவிழ்த்து அந்த மனிதரைப் போர்த்திவிட்டார். பின்னர் மிகுந்த மகிழ்வுடன் வீட்டுக்குத் திரும்பிய பாரதியாரைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அந்த வீட்டு உரிமையாளர், பாரதியாரிடம், நீங்கள் இடுப்பு வேட்டியை வைத்துக்கொண்டு துண்டைத் தானம் பண்ணியிருக்கலாமே என்று கேட்டார். அதற்கு பாரதியார், ஐயா அந்த ஏழை வெளியில் இருக்கிறார், அதனால் அவருக்குக் குளிர் அதிகமாக இருக்கும், எனக்கென்ன நான் வீட்டுக்குள்தானே இருக்கின்றேன். இந்தத் துண்டு போதுமே என்று சொன்னார். மனது பொறுக்காத அந்த வீட்டு உரிமையாளர் வீட்டுக்குள் உடனே ஓடிப்போய் இன்னொரு வேட்டியை எடுத்துவந்து பாரதியாரிடம் கொடுத்தார். அதனை உற்சாகமாக உடுத்திக்கொண்டே, கொடுக்கக் கொடுக்கத்தானய்யா வரும். பாருங்கள் நான் கொடுத்தவுடனேயே கடவுள் இன்னொன்றைக் கொடுக்கிறார் என்று சொன்னார் பாரதியார்.

ஆம் அன்புப் பிள்ளைகளே இத்தவக்காலத்தில் தான தருமம் செய்து, உங்களிடம் இருப்பதை பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அப்போது இறைவன் உங்களுக்கு ஆசி வழங்குவார்.



கபினேஷ் நோர்மன், தரம் 3,
புனித சூசையப்பர் கல்லூரி

# பீடப்பணியாளர்களே இது உங்களுக்காக!







## திருவழிபாட்டு நிகழ்வுகளில் பீடப்பணியாளர்களின் பணிகளும் கடமைகளும்

திருவழிபாட்டு நிகழ்வுகளில் பலவகையான பணிகள் பீடப்பணியாளர்களுக்கு உள்ளன.அவை யாவற்றையும் செய்ய ஒரே நேரத்தில் அவர்கள் பணிக்கப்படலாம். எனவே அவற்றைப் பலருக்கும் பகிர்ந்தளிப்பது நல்லது. எனவே சாதாரணத் திருவழிபாட்டு நிகழ்விற்கு 3 நபர்களும் ஆடம்பரத் திருவழிபாட்டு நிகழ்விற்கு 5 நபர்களும் பணி செய்வது நலம்.

### தொடக்கச்சடங்கு :

✴ பீடத்திற்கு வரும்பொழுது எரியும் திரிகள் மற்றும் திருச்சிலுவையை ஏந்தி வரலாம். பீடத்தை அடைந்த பின்பு வணங்கி சிலுவையையும், எரியும் மெழுகு திரிகளையும் பீடத்தின் மேல் வைத்து விட்டு, பீட முற்றத்தில் உள்ள அவர்களது இடத்திற்குச் செல்வர்.

✴ திருவழிபாட்டு நிகழ்வில் தேவை ஏற்படும் பொழுது, குருவிடம் அல்லது திருத்தொண்டரிடம் புத்தகங்களைக் கொடுப்பது, வேறு தேவைகளில் உதவுவது என்பவை முக்கியமான பணிகளாகும். எனவே பீடத்தின் அருகில் உள்ள இருக்கைகளில் அமர்ந்து எந்த வித கவனச் சிதறலுமின்றி தம் பணியைச் செய்ய வேண்டும்.

### நற்கருணை வழிபாடு :

✴ திருத்தொண்டர் இல்லாத போது, பொது மன்றாட்டு முடிந்த பின்பு குருவிற்கு நற்கருணை வழிபாட்டில் உதவி செய்வர். மக்களின் காணிக்கையைப் பெற குருவிற்குத் துணைசெய்வர். வசதிற்கேற்ப அப்ப இரசத்தைக் கொண்டு வந்து குருவிடம் கொடுப்பர். தூபம் பயன்படுத்தப்பட்டால் அவரே தூபத்தைக் குருவுக்கு முன் உயர்த்திப் பிடிப்பர். காணிக்கை மீதும் பலிபீடத்திற்கும் இறைமக்களுக்கும் தூபமிட குருவுக்கு உதவி செய்வர்.

✴ இறைமக்களுக்கு திவ்விய நற்கருணை வழங்கக் குருவிற்கு உதவி செய்வர். திவ்விய நற்கருணை வழங்கிய பின் திருப்பாத்திரங்களைச் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்துவதில் குரு அல்லது திருத்தொண்டருக்கு உதவி செய்வர்.

### திருவழிபாட்டு நிகழ்வுக்கு முன்பு :

1. ஒவ்வொரு திருவழிபாட்டு நிகழ்வும் தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பாகவே பீடப்பணியாளர்கள் இறைவழிபாடு நடைபெறும் இடத்தில் கூட வேண்டும்.
2. தூய்மையான உடைகளை அணிந்து வரவேண்டும். (மாணவர்கள் முழு கால்சட்டை மற்றும் மேல் கை சட்டை. மாணவிகள் சுடிதார் மற்றும் ஸ்கார்.்.ப்).
3. பீடப்பணியாளர்களுக்கென குறிக்கப்பட்ட திரு உடையை அதற்குரிய புனிதத்தன்மைக்குப் பங்கம் விளைவிக்காமல் அணிதல் வேண்டும்.
4. திருவழிபாட்டு நிகழ்வில் கலந்து கொள்ள தங்களையே தயாரிக்கும் வண்ணம் பீடப்பணியா-ளர்கள் சில நிமிடங்கள் இறைச் சிந்தனையில் ஈடுபட வேண்டும்.
5. இறைவழிபாட்டுக்குத் தேவையான பொருட்களைத் தயார் நிலையில் வைக்க வேண்டும்.

### திருவழிபாட்டு நிகழ்வுக்குப் பின்பு :

1. திருவழிபாட்டு நிகழ்வின் இறுதியில் வரிசையாக அணிவகுத்துத் திருப்பண்ட அறைக்குள் நுழைந்தவுடன் குருவானவருடன் இணைந்து திருச்சிலுவைக்கு வணக்கம் செலுத்த வேண்டும்.
2. குருவானவரிடமிருந்து ஆசீர் பெற்றுக் கொள்ள வேண்டும்.
3. குருவானவர் தனது திரு உடைகளைக் களைய உதவி செய்ய வேண்டும்.
4. ஆசி பெற்ற பிறகு, தங்களது திரு உடைகளைக் களைந்து அதற்குரிய இடத்தில் உரிய மரியா-தையுடன் வைக்க வேண்டும்.
5. திருவழிபாட்டு நிகழ்வு முடிந்தவுடன் பீடப்-பணியாளர்கள் அனைவரும் இணைந்து பீடப்-பணியாளர்களின் செபத்தைச் சொல்லி சில வினாடிகள் இறைச் சிந்தனையில் ஈடுபட வேண்டும்.
6. இறை வேண்டலுக்குப் பின்பு திருவழிபாட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களை உரிய இடத்தில் வைக்க வேதியருக்கு உதவி செய்ய வேண்டும்.

பணிவாழ்வு தொடரும்...

## உமக்குத் தெரியுமா?

### புனிதர்களும் அப்போஸ்தலர்களும் பிறந்த ஊர்கள்

1. புனித சந்தியாகப்பர் - கலிலேயா
2. புனித பார்த்தலமேயு - கானாவூர்
3. புனித யூதாததேயு - நாசரேத்தூர்
4. புனித தோமையார் - கலிலேயா
5. புனித சீமோன் - கானாவூர்
6. புனித மத்தேயு - கப்பர்நாகூம்
7. புனித பவுல் - தர்சு
8. புனித யோவான் - யூதேயா மலைநாடு
9. புனித பிலிப்பு - பெத்சாய்தா
10. புனித லீமா ரோஸ் - பேரு லீமா நகர்
11. தூய அம்புறோஸ் - உரோமை
12. புனித சவேரியார் - சிந்துதேசம்
13. புனித பியோ அடிகள் - தென் இத்தாலி
14. புனித தமியான் பேதுரு - இத்தாலி ரவன்னா
15. புனித ஆரோக்கியநாதர் - வெனிஸ்
16. புனித மதலேன் மரியாள் - கலிலேயா நாட்டின் மகதலா நகர்
17. புனித அந்தோனியார் - போர்த்துக்கலிலுள்ள லிஸ்பன் நகர்
18. புனித செபஸ்தியார் - பிரான்ஸ் நாட்டின் நர்போன் நகர்
19. புனித அருளானந்தர் - போர்த்துக்கலிலுள்ள லிஸ்பன் நகர்
20. புனித றீட்டம்மாள் - இத்தாலியாவில் சாதியா நகர்
21. புனித இராயப்பர் - கலிலேயா ஊரிலுள்ள பெத்சாய்தா
22. புனித வின்சென் டி போல் - பிரான்ஸ் நாட்டின் போய் என்ற கிராமத்தில்
23. புனித பிரான்சிஸ் அசிசியார் - இத்தாலி அசிசி
24. புனித சின்ன திரேசம்மாள் - பிரான்ஸ் நாட்டின் அலென்னா நகர்
25. புனித ஜோன் பொஸ்கோ - இத்தாலியின் ரவன்னா
26. புனித பெட்ரிக் பத்திரிசியார் - ஸ்கொட்லாந்து நாட்டின் பட்ரிக் எனும் இடம்
27. புனித சிறுமி ரோஸ் - வித்தெர்போ நகர் இத்தாலி

ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12

## தவக் காலம்

ஆன்மீகம் சமூகம் மற்றும்,
தனி மனித முயற்சிகளில்
ஆவலாய்க் கருத்தூன்றி
ஆன்ம நலம் தனைக் காப்போம்
ஆயிரம் வாசல் கொண்ட
இதயத்தின் எண்ணங்களை
அலைபாய விடா வண்ணம்
அமைதியில் தினம் திளைப்போம்

'தானொருவன் மாற்றம் பெற்றால்
சமுதாயம் மாறிடுமா?'
தன்குறியாய் இக்கேள்வி
தலையெடுத்தல் தீமையன்றோ
தம்மையே பலியாக
நமக்கீந்தார் இயேசுபிரான் ~ இதனால்
தவக்காலம் நமக்கொல்லாம்
தத்துவத்தின் காலமன்றோ!



## பிள்ளைகளே நீங்கள் கத்தோலிக்க செயல்பாடுகளின் படி நடக்க 5 குறிப்புக்கள்

1. ஒருபோதும் கைவிடாதீர்கள் உங்கள் பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள், பாடசாலை, மறைக்கல்வி ஆகியவற்றில் நீங்கள் இணைந்து உங்களை கட்டியெழுப்புங்கள். இயேசு உங்களுக்கு போதித்துள்ள வழிமுறை

2. மிகவும் ஏழைகள் மற்றும் தேவைகளில் உள்ளோரின் மட்டில் அக்கறை காட்டுங்கள்.

3. திருச்சபையை, குருக்களை அன்பு செய்யுங்கள். கிறிஸ்தவ சமூகப் பணிகளுக்கு உங்களை அர்ப்பணியுங்கள்.

4. குழந்தைகள், சமாதானம் மற்றும் அமைதியின் அப்போஸ்தலராக தங்களின் குடும்பங்களுடனும், தங்கள் வாழ்வுடன் தொடர்புடைய அனைவருடனும் இருக்க கேட்டுக் கொள்கின்றேன்.

5. இயேசுவுடன் பேசுதல் செபம். இயேசுவே உங்களை ஒருபோதும் கைவிடாத மிகப்பெரிய நண்பர். அவரிடம் உங்களின் மகிழ்ச்சி, துன்பங்களை ஒப்படையுங்கள். தவறும் போதெல்லாம் அவர் கட்டாயம் மன்னிப்பார் என்ற நம்பிக்கையுடன் அவரிடம் விரைவாக செல்லுங்கள். குழந்தைகளிடம் இயேசுவைப் பற்றிய எல்லாவற்றையும் பேசுங்கள். அவரது அன்பு இரக்கம், கனிவு மற்றும் நம்மீதுள்ள நட்பால் இயேசு தமது உயிரையே கொடுத்தார் என்பதை கூறுங்கள்.


திருத்தந்தை

# இனிமையான இல்வாழ்விற்கு...!

6

சென்றவாரத் தொடர்ச்சி...

**மணவாழ்வை மண்ணில் குழிதோண்டிப் புதைக்கும் காரணிகள்**

## சந்தேகப் பேய்

**"சந்தேகக் கோடு – அது**
**சந்தோஷக் கேடு – இதை**
**மறந்தவர் வீடு – துன்பம்**
**வளர்ந்திடும் காடு**

மணவாழ்வை மண்ணில் குழிதோண்டிப் புதைக்கும் மடப்பேய் சந்தேகப் பேய். சந்தேகப் பேய் நுழைந்துவிட்ட வீடு நாசம் என்பதில் சந்தேகம் இல்லை.

சந்தேகம் என்னும் சரக்கு ஆதாம் - ஏவாள் காலத்திலேயே திருமண வாழ்வில் நுழைந்துவிட்டது. ஆதாம் தூங்கும் பொழுது ஏவாள் அவனுடைய விலா எலும்புகளையெல்லாம் எண்ணிப் பார்ப்பாளாம். காரணம் ஆதாமுடைய மற்றொரு விலா எலும்பை எடுத்து வேறொரு பெண்ணை இறைவன் படைத்துவிட்டாரோ என்ற சந்தேகம் ஏவாளை வாட்டிவதைத்தது. கணவன் - மனைவியிடையே எழும் சந்தேகம் வெறும் ஊடலாக இருந்துவிட்டால் அது இலக்கிய நயமாகிறது. ஆனால், இதுவே குத்துகின்ற கொடும் வாளாக மாறிவிட்டால் என்னாவது?

ஒரு மனைவிக்குக் கணவர் மீது சந்தேகம். தன் மீது மனைவி சந்தேகப்படுவதை வெறுத்த கணவர், அவளையே வெறுத்து, அவளுடன் தாம்பத்திய உறவுகொள்வதை நிறுத்திக் கொண்டார். மனைவிக்குச் சந்தேகம் வலுவடைந்தது. "என் கணவர் வீட்டிலே சாப்பிடலே, அப்படியானால் அவர் எங்கோ வெளியே சாப்பிடுகிறார் என்றுதானே அர்த்தம்" என்று எண்ணினாள்.

இத்தகைய சந்தேகப் பிராணிகளைப் பார்த்துப் பவுலடியார் கூறுகிறார், "கணவன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யட்டும். அவ்வாறே மனைவியும் கணவருக்குச் செய்யட்டும். கடமையை மறுக்காதீர்கள்" (1கொரி 7:3-5)

**"கதைகட்ட ஒருவன் பிறந்துவிட்டால் – அந்தக்**
**கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு,**
**காப்பாற்றச் சிலர் இருந்துவிட்டால்**
**கள்வர்கள் வாழ்விலும் நியாயமுண்டு"**

என்ற திரைப்படபாடலின் கருத்தைச் சிந்திப்போம்.

## பிடிவாதப் பேய்

இல்வாழ்வைப் பாழாக்கும் இழிவான பேய் பிடிவாத குணம். மணவாழ்வில் கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும் தோற்பதுதான் வெற்றி என்பதை மனதில் கொள்ள வேண்டும். "இன்பமான இல்வாழ்வுக்கு என்ன அறிவுரை கூறுகின்றார்" என்று கணவர் ஒருவர் அறிஞர் ஒருவரைக் கேட்டார். அவர் வழங்கிய அறிவுரை ஒன்று. அவளை அடக்கு அல்லது அவளுக்கு அடங்கு"

வேறொரு கணவர் அதே அறிஞரிடம், "என் மனைவி நான் கிழித்த கோட்டைத் தாண்டக்கூடாது. அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார். அதற்கு அறிஞர் வழங்கிய ஆலோசனை "எங்கே கோடு கிழிப்பது" என்று முதலில் உங்கள் மனைவியைக் கேட்டுவிட்டு, அதன்பின் அவள் சொல்வது போல் கோட்டைக் கிழியுங்கள்"

அறிஞர் முதலில் சொன்ன அனுகுமுறை சரியானதல்ல. கணவனும் மனைவியும் சரிநிகர் கடமையும் உரிமையும் கொள்ளவர்கள் என்பதால் யார் யாருக்கு அடங்கி ஒடுங்கி நடக்க வேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. இருவருமே ஒருவர் மற்றவரின் விருப்பு வெறுப்புக்களுக்கு மதிப்பளித்து விட்டுக்கொடுத்து நடக்கும் பண்பாளர்களாக இருத்தல் இல்வாழ்வுக்கு இனிமை சேர்க்கும். அதற்காகத் தங்கள் தனித்தன்மையை இழக்க வேண்டிய தேவை இல்லை. உண்மையிலேயே மாறுபட்ட குணங்கள்தாம் வாழ்க்கைக்குச் சுவை தந்து மெருகூட்டுகின்றன. எதிரும் புதிருமான இரண்டு மாறுபட்ட சக்திகளைக் கொண்டுதான் இப்பிரபஞ்சமும் (Universe) மனித வாழ்வும் இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஆண் - பெண் ஆகிய இருவரின் குண நலன்களை மாறுபடப் படைத்து, அதே நேரத்தில் அவர்களை




ஒருங்கிணைத்து இன்புறச் செய்யும் இறைவனின் ஞானம் எத்துணை வியப்புக்குரியது.

ஆண் உடல் வலிமை மிக்கவன் (Strong) பெண்யோ மெல்லிய இயல்புடையவள் (Soft). ஆண் உணர்ச்சி குன்றியவன். (Less Emotional) பெண்ணோ உணர்ச்சி மிக்கவள் (More Emotional) ஆண் ஆட்கொள்ளும் தன்மையுடையவன் (Aggressive) பெண்ணோ ஆட்படும் தன்மையுடையவள் (Passive) ஆணை மூளையாகவும், பெண்ணை இதயமாகவும் கூறுவர். ஆண் காம உணர்வுமிக்கவன் (sex-Minded) பெண் காதல் உணர்வுமிக்கவள் (Love-Minded)

இப்படி, இரு முரண்பட்ட கூறுகளைக் கொண்ட தம்பதியரின் தாம்பத்திய வாழ்வில் வெற்றியின் இரகசியம் என்னவென்றால், கணவன் தன் மனைவியின் உள்ளத்தை மகிழ்வித்து, அவளது உடலைப் பெற வேண்டும். மனைவியோ தன் கணவரின் உடலை மகிழ்வித்து அவள் உள்ளத்தைப் பெறவேண்டும். மணமக்கள் இரவில் வெறும் தாம்பத்திய இன்பம் அவர்கள் பகல் முழுவதும் வாழ்ந்த அன்புறவின் உச்சக்-கட்டம். "காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி, மாலை மலரும் இந்நோய்" (குறள் 1227). அதாவது "காலையில் அரும்பாகி, பகல் முழுவதும் வளர்ந்து, மாலையில் மலராகின்றது" என்கின்றார் வள்ளுவர்.

தம்பதியர் தங்களின் மாறுபட்ட, வேறுபட்ட குணநலன்களைப் போற்றி, பிடிவாத குணமகற்றி, கொடுக்கல் - பெறுதல் என்ற அணுகுமுறையைப் பின்பற்றி வாழப் பழகிக் கொள்வார்களாக. அப்போது ஒருவர் மற்றவரை அடக்கவோ அல்லது ஒருவர் மற்றவருக்கு அடங்கவோ தேவை இராது.

## பழிவாங்கும் பேய்

தம்பதியர், ஒருவர் மற்றவரின் குற்றங்களை மன்னித்து மறந்து, மகிழ்ச்சியாக வாழ்வதற்குப் பதிலாக, ஒருவர் மற்றவரின் குறைகளை மிகைப்படுத்தி, பழிவாங்கவும், ஒருவர் மற்றவர் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் இழிகுணம் முளைத்திடவும் அனுமதித்தால் இறைவனால்கூட அதைத் தடுத்துநிறுத்த முடியாது. குறையில்லா மனிதன் யாருமில்லை. இயற்-கையிலும் குறையுண்டு. நெல்லிலே உமியும், நீரிலே நுரையும், நிலவிலே களங்கமும் உண்டு. சிரிக்கிற இதழ்களுடைய ரோஜா செடியிலே குத்துகின்ற முள் இருக்கின்றது. இரவும் பகலும் சேர்ந்ததுதான் ஒரு நாள். அவ்வாறே, நிறையும் குறையும் உள்ளவன்தான் மனிதன். அவர்களை அவர்களாகவே, அவர்களுக்குள் உள்ள நிறை குறைகளோடு ஏற்றுக் கொள்வதே உண்மையான அன்பு.

இளைஞன் ஒருவன் என்னிடம் வந்து,"பிரதர், நான் ஒரு பெண்ணை விரும்புகின்றேன். ஏனெனில், அவள் சிரிக்கும்போது அவள் கன்னத்திலே விழும் குழி மிகவும் அழகாக இருக்கிறது. நான் அப்பெண்ணை மணந்து கொள்ளலாமா" என்று கேட்டான். அதற்கு நான், "தம்பி, எச்சரிக்கை, நீ மணந்துகொள்ளப் போவது அப்பெண்ணின் கன்னத்தை மட்டுமல்ல, முழுப் பெண்ணையும் என்பதை மறந்துவிடாதே" என்று பதிலளித்தேன். கணவன் மனைவியின் அழகையோ, ஆபரணங்களையோ அல்லது அவருடைய ஒரு சில நல்ல பண்புகளையோ மட்டும் மணப்பதில்லை. அவளை முழுமையாக, எத்தகைய நிபந்தனையும் இன்றி ஏற்றுக் கொள்ள வேண்டும். மனைவியும் அப்படித்தான்.

உண்மை அன்பின் மறு பக்கம் மன்னிப்பு. இறைவன் நம்மை அன்பு செய்கிறார் என்பதை நம் குற்றங்களை மன்னிப்பதில்தான் காட்டுகிறார். கடவுள் நம்மை மன்னிக்கவில்லை என்றால் சொர்க்கம் காலியாகத்தான் இருக்கும். மீட்பு என்பதே பாவ மன்னிப்பு (லூக் 1:77) என்று நற்செய்தி கூறுகிறது. கடவுள் வாரி வழங்குவதில் மட்டுமல்ல, மன்னிப்பதிலும் தன் வள்ளல் தன்மையைக் காட்டுகிறார்.

உலகில் இதுவரை யாரும் அன்புக்குக் கொடுக்காத விளக்கத்தைக் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம் 13ம் அதிகாரத்தில் பவுலடியார் குறிப்பிடுகிறார். எல்லாரும் மனப்பாடம் செய்ய வேண்டிய பகுதி அது. "அன்பு பொறுமையுள்ளது. அழுக்காறு கொள்ளாது. சீற்றத்திற்கு இடம் தராது, வர்மம் வைக்காது, அனைத்தையும் தாங்கிக் கொள்ளும், அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்" என்று அடுக்கடுக்காக வர்ணிக்கிறார். முறையீடு இருந்தால் மன்னிக்கும்படி அறிவுறுத்துகின்றார்.

என் வீட்டில் குடியிருக்கும் ஒரு குடும்பத்திலிருந்து ஒருவர் என்னிடம் வந்து, "என் மனைவி மரியாதையில்லாமல், தகாத வார்த்தைகளால் என்னைத் திட்டினாள். அவளை விறகுக் கட்டையாலே செம்மையாகச் சாத்திட்டேன். தயவுசெய்து நீங்களும் அம்மாவும் வீட்டிற்கு வந்து அவளைச் சமாதானப்-படுத்துங்கள்" என்று கேட்டார். நாங்களும் அவர்கள் வீட்டிற்குச் சென்றோம். உண்மையிலேயே அம் மனைவிக்குச் சரியான அடி. உடலெல்லாம் ஒரே காயம், வீக்கம், கன்றிப் -போயிருந்தது. பரிதாப நிலை. காய்ச்சல் வேறு. சாப்பிடாததால் களைப்பு மேலிட்-வராக இருந்தார்.

அந்த நிலையிலும் அவள் கூறியது எங்களுக்குப் பெரிய அதிர்ச்சியை அளித்தது. "இந்த மனிதனோடு வாழ்வதும் ஜெயிலில் இருப்பதும் ஒன்று தான். இவரைக் கொலை செய்துவிட்டு, ஜெயிலுக்குப் போகத் தயார்" என்று ஆவேசத்துடன் கூறினாள். உண்மையில் அவனை வெட்டுவதற்கு அரிவாள் ஒன்றை எடுத்ததாக அவள் கணவர் கூறினார். அக்கணவன் செய்ததை நாம் நியாயப்படுத்தவில்லை. என்றாலும் அம் மனைவிக்கு மன்னிக்கும் மனப்பான்மை இல்லாமல் கொலை செய்யும் அளவுக்கு துணிந்தது விசித்திரமானது. "கொலையும் செய்வாள் பத்தினி"

இதற்கு நேர் மாறான வேறொரு நிகழ்ச்சி. ஒரு கிராமத்தில் மருத்துவ முகாமிற்குச் சென்றபோது நடந்தது. ஒரு தாய் தன் மூன்று பிள்ளைகளுடன் வந்திருந்தார். "எங்கே உங்கள் கணவர்" என்று கேட்டேன். "அவர் வீட்டை விட்டுப் போய் மூன்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. நான்தான் அன்றாடம் கூலி வேலை செய்து இப்பிள்ளைகளைக் காப்பாற்றி வருகிறேன்" என்றார். "அவர் மனந் திரும்பி வீட்டிற்கு வந்தால் அவரை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா" என்று நான் கேட்டதற்கு அத்தாய், "ஏன் அப்படிப் பேசுகிறீர்கள். கொடிக்கு கும்பிட்டிக்காய் கசக்குமா" என்று என்னைத் திருப்பிக் கேட்டார்.

உண்மையில் நான் மிகவும் வியப்படைந்தேன் கும்பிட்டிக்காய் என்பது மிகப் பயங்கரமாகக் கசக்கும். யாருக்கு? மனிதர்களுக்கு. ஆனால் அந்தக் காயைத் தாங்கிக் கொண்டிருக்கிற கொடிக்கு அது கசக்காது. தன்னைக் கொடிக்கும் தன் கணவனை கும்பிட்டிக் காய்க்கும் ஒப்பிட்டு, அத்தாய் கூறியது என் மனதில் இன்றும் பசுமையாக உள்ளது. மன்னிப்பு, தன் கணவனை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளத் தயாரான மனநிலை மனிதத் தன்மை உயிருடன்தான் இருக்கிறது.

இவர்களுக்கெல்லாம் இயேசு கூறுவது என்ன? "மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள் (லூக் 6:38). ஏழு முறை மட்டுமல்ல எழு எழுபது முறை மன்னியுங்கள்" (மத் 18:22)

**"மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம்**
**மாணிக்கக் கோயில், இதை**
**மறந்தவன் வாழ்வு தடம் தெரியாமல்**
**மறைந்தே போகும்"**

இப்பாடல் தனி மனிதனுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும், குறிப்பாகத் தம்பதியர்க்குப் பொருந்தும்.

**தொடரும்**

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

Conference of Major Religious Superiors of Sri Lanka (CMRS)

இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள் 03

Gospel Prophecy Hope

Consecrated Life in the Church today

# நல்லாயன் நம் அன்புநாயகியின் சபை

## (Congregation of our Lady of Charity of the Good Shepherd)

**நல்லாயன் துறவற சபையின் தனிவரம் (Charism)**

கருணை நிறை அன்பின் மூலம் நல்லாயன் யேசுவின் சமத்துவமான பிரசன்னத்தை உலகெங்கும் எடுத்துரைக்கவும், அநீதிக்காக துன்பப்படுவோர் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோர்கள், பாலியல் ரீதியாக பாதிப்படைந்து வாழ்க்கையில் புண்படுத்தப்பட்டு பல்வேறு அனுபவங்களோடு வருகின்ற இளம் யுவதிகளின் உடலும் உள்ளமும் குணமடைந்து அவர்கள் முழுமையான வளர்ச்சியடைய துணைபுரிகின்றோம்.

**விருதுவாக்கு: ( Motto )**

‘ஒரு ஆன்மா முழு உலகைவிட மேலானது’
(புனித மேரி யுப்ரேசியா)

எமது சின்னத்தின் கருத்து

**சிலுவை:** *எமது சபை சிலுவையிலேதான் வேரூன்றியிருக்கிறது. ஆகவே யேசுவின் பாடுகளிலி –ருந்தும், சிலுவை மரணத்திலிருந்தும் விலகி எமது குறிக்கோளை நாம் அடைய முடியாது.*

**ஆயனின் கோல்:** *நல்லாயனின் தனிவரத்தை அடையாளமாக குறிப்பிடுகிறது. ‘என் மந்தைகளுக்காக என் உயிரையும் கொடுப்பேன்’ என்ற நல்லாயனின் வார்த்தைக்கிணங்க அவர் வழி நாம் செல்ல வேண்டும்ஃ பின்பற்ற வேண்டும்.*

**இரண்டு இதயங்கள்:** யேசுகிறிஸ்துவின் இதயமும் மரியாளின் இதயமும் அவர்களது அன்பை அடையாளமாகக் கொண்டு, எமது ஆன்மீக வாழ்விற்கு உறுதுணையாக இருக்கிறது. புனித யூட்ஸ் அருளப்பரும், புனித மேரி யுப்ரேசியாவும் யேசுவின் திரு இருதயத்திலும், மரியாளின் மாசற்ற இருதயத்திலும் அதிக பக்தி கொண்டு, அன்பும், பக்தியும், புத்துயிரையும், மன்னிப்பையும் அதிகமாக பெற்றுக்கொண்டு, அவை எம் மத்தியிலே ஊற்றாகவும் செயல்படுகிறது.

**நல்லாயன் நம் அன்பு நாயகியின் சபை ஆரம்பம்:** 1835

**ஸ்தாபகி:** புனித மேரி யுப்ரேசியா உரோமன் கத்தோலிக்க துறவற சபை

**சபைத்தலைவி :** அருட் சகோதரி பிறிஜிட் லோலர்
The Generalate
Via Raffaello Sardiello 20
00615, Rome, Italy

**மாகாணத் தலைவி:** இலங்கை/பாகிஸ்தான்: அருட்சகோதரி பிரன்சின் முத்துகல

நல்லாயன் நம் அன்பு நாயகியின் துறவற சபை 1835ம் ஆண்டு புனித மேரி யுப்ரேசியா பெலற்றிய அருட்சகோதரியின் மூலம் பிரான்ஸ் தேசத்தில் ஆஞ்சேநகரில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபை புனித யூட்ஸ் அருளப்பரால் நிறுவப்பட்ட பாதுகாப்பு இல்லமென அழைக்கப்படும், நம் அன்பு நாயகியின் சபையின் ஞானநெறியில் வேரூன்றி நிற்கிறது. தந்தை யூட்ஸ் அருளப்பர் பிரான்ஸ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மேற்கொண்ட மறைபரப்பு பயணங்களின் போது பல இளம் பெண்களினதும் வளர்ந்த பெண்களினதும் ஆன்மீக வாழ்வு சீர்குலைந்து அவர்கள் ஏனையோரால் துஸ்பிரயோகம் செய்யப்படுவதையும் ,அவரால் அவதானிக்க முடிந்தது. தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க விரும்பிய அப்பெண்களுக்கென அவர் 1641ம் ஆண்டில் ஓர் பாதுகாப்பு இல்லத்தை ஆரம்பித்து இந்த அன்புச்சேவையில் பங்கேற்க விரும்பிய பெண்களிடம் அதை ஒப்படைத்தார் இதுவே நம் அன்பு நாயகியின் சபை ஆரம்பம்.

அருட்சகோதரிகள் தங்கள் சபையின் சிறப்புக் குறிக்கோளுக்கு பிரமாணிக்கமாய் இருக்கும் பொருட்டும், அவர்கள் வாழ்வில் ஏற்படும் இன்னல்கள், அவர்களை மேற்கொள்ளாதிருக்கும் பொருட்டும் கன்னிமை, ஏழ்மை, கீழ்படிதல் எனும் வார்த்தைபாட்டையும் மக்களின் இரட்சணியத்தின் மேல் ஆர்வம் காட்ட அப்போஸ்தலிக்க ஆர்வம் எனும் நான்காவது வார்த்தைப்பாட்டையும் அவர்கள் எடுக்க வேண்டியிருந்தது.

எம் பணிகளில் முக்கியமாக வாழ்க்கையில் பலவிதமான பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்த இளம் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் அவர்களது உடைந்த உள்ளங்களை ஆறுதல்படுத்தவும் முறைசாரா கல்வியும் ஆரம்பிக்கப்பட்டது.

அக்காலத்தில் சபையின் ஒவ்வொரு இல்லங்களும் சுயமாகவும், சுதந்திரமாகவும், இயங்கிக்கொண்டிருந்தது. ஆகவே புனித மேரி யுப்ரேசியா ஆஞ்சே நகரில் தலைவியாக நியமிக்கப்பட்டு உலகெங்கும் பரவலாக இயங்கும் அப்போஸ்தலிக்க பணியை கண்காணிக்க முன்னோக்கி செயற்பட்டாள். அதற்கான ஏற்பாடுகளை செய்ய பொது ஆட்சி முறைக்கு வேண்டிய உத்தரவை திருத்தந்தையிடம் பெறுவதற்கு தேவையான சகல முயற்சிகளையும் இடையூறுகளையும் வெற்றிகொண்டு, 1835ம் ஆண்டு நல்லாயனின் அன்பு நாயகியின் சபையை ஆரம்பித்தாள்.

1868ம் ஆண்டு சித்திரை மாதம் அவளது மரணத்திற்கு முன்பு பல இடையூறுகளிலும் வெற்றியடைந்து 5 கண்டங்களிலுமாக 110 இல்லங்களை உருவாக்கினாள். எமது சபை இரண்டு கிளைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தியான சகோதரிகள், அப்போஸ்தலிக்க சகோதரிகள். கொழும்பு ஆயர் ஹிலறியன அவர்களின் அழைப்பிற்கு இணங்கி இலங்கைக்கு அருட்சகோதரிகளை அனுப்ப இணங்கினாள். 1869ம் ஆண்டு புனித யுப்பிரேசியாவை தொடர்ந்து வந்த அருட் சகோதரி நான்கு அருட்சகோதரிகளை இலங்கைக்கு அனுப்பி வைத்தாள். நல்லாயன் சகோதரிகள் முதல் முறையாக கொட்டாஞ்சேனைக்கு வருகை தந்து அங்கே தமது மறைக் கல்வியை ஆரம்பித்தார்களா. அக்காலத்திலே மறைக்கல்வி மிகமிக அவசியமாக கருதப்பட்டிருந்தது. ஆகவே இலங்கையில் முதல் இல்லமாக ஆரம்பித்து வைத்தார்கள்.

தொடர்ச்சி 15ம் பக்கம் →

# புனித ஜோண் பப்ரீஸ்ட் டிலாசால் சபை

**கிறிஸ்தவ பாடசாலைகளில் பணிபுரியும் கிறிஸ்தவ அருட்சகோதரர்களின் (டிலாசால்) நிறுவக ஆசிரியர்களின் காப்புத் திருந்தகை.**

**நிறுவக பெயர் :–** தூய ஜோண்பப்ரிஸ்ட் டிலாசால்
**சபையின் பெயர் :–** கிறிஸ்தவ பாடசாலைகளின் அருட்சகோதரர்கள் (டிலாசால் அருட்சகோதரர்கள்
**நிறுவகரின் இறையருட் கொடை :**
கிறிஸ்தவ கல்வி, இளைஞர்கள், ஏழை, இளைஞர்களுக்கான வழிகாட்டுதலில்
முழுமையான அர்ப்பணிப்பும் இறை நம்பிக்கையும் சபையின் ஆக்கமும்.

**இலங்கையில் முதன் முதலில் ஆரம்பித்தது :–**
புனித. பெனடிற் கல்லூரி கொழும்பு - 13 (1867)

### பாடசாலைகளும் ஏனைய நிறுவங்களும்

**கொழும்பு மறைமாவட்டம் :–**
டிலாசால் மாகாணத் தலைமையகம் கொழு -15.
புனித. பெனடிற் கல்லூரி கொழும்பு -13.
டிமசனட் கல்லூரி கந்தானை
புனித. சூசையப்பர் கல்லூாரி கொழும்பு -14.
டியகலை இளைஞர் நகர் ராகம
லசாலியன் கல்விசேவைகளின் குழுமம் (LCEC) கொழும்பு -15.

### ஆன்மீக உருவாக்கல் நிறுவனம்

(ISFA) கொழும்பு - 15.
லசாலிய நிறுவனம் (Lasalle Institute) கொழு -13.

**மன்னார் :–**
புனித. சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை.
புனித. அன்னம்மாள் மத்திய மகா வித்தியாலயம் வங்காலை.
நானாட்டான் மத்திய மகா வித்தியாலயம்
கருங்கண்டல் றோ.க. தமிழ் மகா வித்தியாலயம்
புனித பத்திமா மத்திய மகா வித்தியாலயம் பேசாலை.
லசாலிய சிறுவர் வளாகம். (La Salle Kids Campus) மன்னார்.

**குருநாகல் :–** புனித . ஆனாள் கல்லூரி
**கண்டி :–** விவசாய பயிற்சி நிலையம்
( Agro Training Center) நுவரெலியா.

**தற்போதைய சபையின் மாகாணத்தலைவர் :**
அருட்.சகோ.டென்ஸில் பெரேரா, FSC

**தலைமையகம் :–** 130, டிலாசால் வீதி, முகத்துவாரம் கொழும்பு - 15

**விசேட மறைப்பணி :** - இளைஞர்களின் கல்வி வழிகாட்டல் (முறைசார் / முறைசாரா கல்வி முறைமைகள்)

**வரலாறு** : தற்போதைய உலகை விட மாறுபட்ட உலகில் புனித ஜோண்பப்ரிஸ்ட் டிலாசால் 300 வருடங்களுக்கு முன்னர் செல்வந்த குடும்பத்தில் பிரான்சில் உள்ள அழகிய “றீம்ஸ்” நகரில் பிறந்தார்.

தமது பெற்றோர்களின் மரணத்தின் பின்னர் தமது குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் அவரே சுமந்து கொண்டார். இறையியல் கற்கை நெறிகளை முடித்த பின்னர் ஏப்ரல் திங்கள் 9ம் நாளில் 1678ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இருவருடங்களின் பின்னர் இறையியலில் கலாநிதிப்பட்டத்தை பெற்றுக் கொண்டார். இச்சமயத்தில் வறிய பிள்ளைகளுக்கென பாடசாலையை அமைக்கும் உள்நோக்குடன் மிலேச்சத் தன்மை வாய்ந்த கல்வியறிவற்ற இளைஞர்களுடன் ஈடுபாடு கொண்டு விளங்கினார்.

அக்காலத்தில் பிரான்சிய நாட்டவர்கள் சிலர் செல்வந்தர்களாகவும் வசதிமிக்கவர்களாகவும் ஒருசிலர் வாழ்ந்து வர பலர் மிக வறியவர்களாகவும் சமூகத்தின் அடிமட்டத்தினராகவும் சேரிப்புறங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்து வந்தனர். இவர்களுள் கணிசமானவர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர். இவர்களில் ஒரு சிலர் தம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிறிதளவு நம்பிக்கை கொண்டோராய் இருந்தனர்.

தூய டிலாசால் இவ்வுலகிலோ மறுவுலகிலோ மீட்பிற்கு வெகுதூரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த இவ்ஏழை மக்களின் இன்னல்களை உணர்ந்தவராகவும் அவர்களுக்கே பணியாற்ற வேண்டுமென்ற ஆர்வத்துடன் விளங்கினார். தமது திறமைகளையும் கல்வித் தகைமையினையும் கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு புகட்டும் பேரார்வத்துடன் காணப்பட்டார்.

தமது நற்பணி சிறக்கவேண்டுமென்று தனது சொந்த இல்லத்தையும் குடும்பத்தினரையும் திருச்சபையில் தமக்கிருந்த பதவியையும் செல்வத்தையும் கைவிட்டு ஆசிரிய குழாமுடன் ஒரு குழுமத்தை உருவாக்கினார். இவர்களே பின்னர் கிறிஸ்தவ பாடசாலைகளின் அருட்சகோதர்களாக மாற்றப்பட்டனர். புதியதொரு துறவற வாழ்வுமுறை அதாவது தமது இலவச பாடசாலைகளை வழிநடத்த “இணைந்தும் இணைக்கப்பட்டும்” என்ற விருது வாக்குடன் உருவாக்கப்பட்ட அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலையினரின் திருக்குழுமம் என்ற இவரது புதுமுயற்சி திரு அவையின் அதிகாரிகளிடத்தில் எதிர்ப்பினைச் சந்திப்பதற்கு ஏதுவாயிற்று. தூய டிலாசாலினால் தோற்றுவிக்கப்பட்ட இலவச புதிய கல்விமுறைகள் அதாவது, கட்டணம் செலுத்தி கற்கக் கூடிய மாணவர் அல்லது அல்லாதவர் அனைவருக்கும் உகந்த கல்வி முறைமையாக இது அமைந்தமையினாலாகும். எப்படியிருப்பினும் தூய டிலாசாலும் அவரது அருட்சகோதரர்களும் தொடர்ந்தும் பிரான்சில் திறமையான கல்விப் பாடசாலைகளை நிறுவினர். இப்பாடசாலைகளில் தாய்மொழி மூலமான கற்பித்தல்கள், மாணவரது திறமைக்கும் ஏற்றபடியான குழும முறைகள், ஏற்பு முறைமையிலமைந்த மத வழிகாட்டல்கள், பாட வழிகாட்டல்கள் இறையழைத்தல் பணிவாழ்வு பற்றிய சிந்தனை கொண்டு நன்கு தாயார்படுத்தப்பட்ட ஆசிரியர்களும் பெற்றோர்களும் இப்பள்ளிகளில் காணப்பட்டனர்.

தூய டிலாசால் பொதுநிலை ஆசிரியர்களை வழிநடத்திய முதன் முயற்சியாளர் ஆவார். பணிபுரியும் இளைஞர்களுக்னெ ஞாயிறு தின பாடநெறிகளையும் தமது கடமைகளில் இருந்து கவனயீனம் தவறுவோறுக்கென பிரான்சில் முதன் முறையாக ஒரு நிறுவகத்தை நிறுவிப் பராமரித்து வந்தார் எனலாம்.

தொடர்ச்சி 15ம் பக்கம் →

# புனித யோசேவ்வாஸ் அடிகளின் மன்றாட்டுமாலை



ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும்

கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் மன்றாட்டை நன்றாகக் கேட்டருளும்
பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய இறைவா,
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**
உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய இறைவா,
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**
தூய ஆவியாகிய இறைவா,
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**
தூய திரித்துவமாயிருக்கிற ஏக இறைவா,
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

- புனித மரியாயே
  **எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
- புனித யோசேவ்வாஸ் அடிகளே,
  **எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**
- கோவாவின் பெனாலிம் எனும் ஊரில் பிறந்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- கிறிஸ்டோபர் வாஸ் மரிய மிராண்டா ஆகிய பெற்றோரிடம் ஞான வாழ்க்கையைப் பழகிப் பயிற்சி பெற்ற புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- சிறுவனாயிருந்த காலம் முதல் 'சின்னப் புனிதர்' என அன்பு பெயரால் அழைக்கப்பட்ட புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- இலங்கையின் கத்தோலிக்க விளக்கு அணையாது காக்கத்தேவ விருப்பத்தின்படி குருவாக அழைக்கப்பட்ட புனிதயோசேவ்வாஸ் அடிகளே,
- கனரா பிரதேசம் முழுவதும் மறை மணம் பரவச் செய்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- இலங்கையின் கத்தோலிக்கர் வேத கலாபனையில் கைவிடப்பட்டிருப்பதை அறிந்து மிகுந்த துயரத்துக்குள்ளான புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- கோவைக்குச் சென்று ஒரட்டோரியன் சபையை மீண்டும் உயிர் பெறச் செய்து, உயரிய தலைவராக மதிக்கப்பட வரம் பெற்ற புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- துன்புறும் இலங்கைத் திருச்சபைக்கு உதவ வேறு குருக்கள் யாரும் முன்வராத போதும், அப்பணியை நிறைவேற்ற உறுதியுடன் முன்வந்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- அடிமைபோல் பணிபுரிய மாசற்ற தேவதாயின் முன் தம்மைத் தாமே விற்ற புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- வாணிபக் கூலியாள் போல மாறுவேடத்தில் படகேறித் துன்புறும் கத்தோலிக்கரைத் தேடி மன்னார் கரையை வந்தடைந்தபுனித யோசேவ்வாஸ் அடிகளே,
- ஒல்லாந்தர் ஆட்சியில் துன்ப துயரங்களைப் பாராமல் சில்லாலைக் கிராமத்தினை மையமாகக் கொண்டு மறை மணம்பரப்ப ஆரம்பித்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- உளவாளியென இரண்டாம் விமலதர்ம சூரிய மன்னனின்கட்டளைப்படி வாவுட கிராமத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- மலைநாடு முழுவதும் ஏற்பட்ட பெருவரட்சியின் போது, அரசனின் வேண்டுகோளுக் கிணங்கி, உறுதியான விசுவாசத்துட செப வல்லமையால் மழை பெய்வித்துப் புதுமை புரிந்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- இருண்ட கானகங்களினூடாக கால்நடையாகச் செல்கையில் எதிர்ப்பட்ட கொடிய விஷப்பாம்புகளையும், பயங்கர மிருகங்களையும், சிலுவையின் பலத்தால் விலகி ஓடச் செய்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- கல்கமுவை வாக்கோட்டை ஆகிய பிரதேசங்களுக்குச் சிதறிச் சென்ற கத்தோலிக்க மக்களைத் தேடிச் சென்று, அவர்களை இறை விசுவாசத்தில் உறுதிபெறச் செய்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- தினமும் செபமாலை சொல்வதனால் தேவதாயின் மட்டில் மிகுந்த பக்தியுள்ளவராக எமக்கு வழிகாட்டும் புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- எல்லோரினதும் துக்க, வேதனைகள், துயரங்களைத் தயவுள்ள தந்தை போல் செவிகொடுத்து, அவர்களை ஆறுதல் படுத்திய புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- இறையன்பை அனுபவித்துத் தம் எளிமையான வாழ்வின் வழிகாட்டல் மூலமாக எல்லோரையும் கிறிஸ்துவில் ஒன்று சேர்த்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- பிள்ளைப் பேற்றற துயரத்தால் மனவேதனைக்கு உள்ளான தம்பதியினருக்காக இறைவனிடம் வேண்டி, அவர்களுக்கு உதவி பெற்றுக் கொடுத்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- கண்டியை மையமாகக் கொண்டு நாடு முழுவதும் மீண்டும் மீண்டும் நடந்து, மக்க ளுக்குப் பெரும் சேவை செய்த புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- அப்போஸ்தலிக்க சேவையிலீடுபடும் இல்லற வாசிகளுக்கு முன்மாதிரிகையாயிருந்து, இல்லற வாழ்வு மூலமும் திருச்சபையை வளமூட்ட வழிகாட்டிய புனித யோசேவ்வாஸ் அடிகளே
- கஷ்டமான பிரயாணங்களில் ஈடுபடும் யாராவது உம் பாதுகாப்பை வேண்டிய போது, பயணம் முடியும் வரை அபாயங்களிலிருந்தும் அவர்களைக் காப்பாற்ற வரம் பெற்ற புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- வாழ்வின்போது செய்ய முடியாதவைகளை, மரணத்தின் பின் செய்யமுடியாதென் பதைத் தம்மைப் பின்தொடர்ந்தவர்களுக்குத் தம் மரணப்படுக்கையில் வெளிப்படுத்திய புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- கோவையில் பிறந்து இலங்கையின் திருத்தூதராகப் பேறு பெற்ற புனித யோசேவ்வாஸ் அடிகளே,
- சகோதர அன்பிலும், தேவ தயவிலும் காலத்தைச் செலவிட்டு இறை சமூகத்தில் வீற்றி ருந்து எம் எல்லோருக்கும் மோட்ச உரிமை கிடைக்க வழியாயிருக்கும் புனித யோசேவ் வாஸ் அடிகளே,

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின்
செம்மறியாகிய இயேசுவே
**எங்கள் பாவங்களை பொறுத்தருளும்**
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின்
செம்மறியாகிய இயேசுவே
**எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்**
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின்
செம்மறியாகிய இயேசுவே
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

முதல் : இயேசுக்கிறிஸ்துவின் திருவாக்குகளுக்கு நாங்கள் பாத்திரமாய் இருக்கத்தக்கதாக.
எல் : புனித யோசேவ்வாஸ் அடிகளே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

செபிப்போமாக
மிகவும் இரக்கம் நிறைந்த தந்தையே, புனித யோசேவ்வாஸ் அடிகளை இலங்கையின் திருத்தூதராக எமக்குத் தந்த உம்மைப் போற்றி நன்றி கூறுகின்றோம். எம் முன்னோரின் விசுவாசத்துக்கு மாபெரும் இடர் வந்தபோது, அவர்களைக் காத்துத் தைரியமூட்டிய அவருடைய வேண்டுதலால், இன்று எம் விசுவாசத்துக்கு வரும் எல்லாவித இடர்களிலும், இருளிலுமிருந்து எம்மைப் பாதுகாத்தருள மன்றாடுகின்றோம். இதை எம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் வழியாக எமக்குப் பெற்றுத் தந்தருளும். ஆமென்.

# கைபேசிகளில் சத்தமாக இசையைக் கேட்பதால் செவித்திறனுக்கு ஆபத்து



பாடல்களைச் சத்தமாக கேட்பதால் உலகில் இலட்சக்கணக்கான இளையோர் செவித்திறனை இழக்கும் ஆபத்தை எதிர்கொள்கின்றனர் என்று உலக நல்வாழ்வு நிறுவனம் எச்சரித்துள்ளது. நடுத்தர மற்றும் அதிக வருவாய் உள்ள நாடுகளில் இந்நிறுவனம் எடுத்த ஆய்வின்படி, 12க்கும் 35 வயதுக்கும் உட்பட்டவர்களில் ஏறக்குறைய பாதிப்பேர் தங்களின் கைபேசிகளிலும், பிற இசைக் கருவிகளிலும் ஒலியின் சப்தத்தை மிக அதிகமாக வைத்து கேட்கின்றனர் எனத் தெரிய வந்துள்ளது.
இந்நிலை குறித்து எச்சரித்துள்ள உலக நல்வாழ்வு நிறுவனம், இதனால் இவர்களின் கேட்கும்திறன் பாதிக்கப்படும் என்று கூறியது. எட்டு மணி நேரத்துக்கு 85 decibelக்கு மேலும், 15 நிமிடங்களுக்கு 100 decibelலுக்கு மேலும் ஒலியின் திறன் இருந்தால் ஆபத்து அதிகம் என்றும், ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்குமேல் தங்களின் தனிப்பட்ட இசைக் கருவிகளில் இசையைக் கேட்காமல் இருப்பது நல்லது என்றும் பரிந்துரைத்துள்ளது ஐ.நா.வின் நல்வாழ்வு நிறுவனம்.




# நன்மை செய்ய கற்றுக்கொள்பவரை கடவுள் தாராளமாக மன்னிக்கிறார்



நன்மை செய்யக் கற்றுக் கொள்பவர்களை கடவுள் தாராளமாக மன்னிக்கிறார், ஆனால், வெளிவேடக்காரர் மற்றும் போலியான புனித வாழ்வு வாழ்பவர்களை கடவுள் மன்னிப்பதில்லை என்று, சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் கடந்த செவ்வாய் காலை நிறைவேற்றிய திருப்பலியில் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.
நன்மை செய்வதைவிட புனிதர்களாகக் காட்டிக்கொள்வதில் மிகுந்த அக்கறை எடுக்கும் போலிப் புனிதர்களைவிட, தங்களின் கடந்தகாலப் பாவங்களை விடுத்து, அதிகமாக நன்மை செய்யக் கற்றுக்கொண்டு, தூய வாழ்வு வாழும் பாவிகளை கடவுள் விரும்புகிறார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.
தீமை செய்தலை விட்டொழியுங்கள், நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள், திக்கற்றோருக்கும், கைம்பெண்ணுக்கும் உதவுங்கள் என்று கடவுளிடமிருந்து நேரிடையாக வரும் எசாயா அறிவுரைப் பகுதியை(எச.1,16-20) மையமாக வைத்து மறையுரையாற்றிய திருத்தந்தை, கைவிடப்பட்ட வயதானவர்கள், பள்ளிக்குச் செல்லாத சிறார்கள், சிலுவை அடையாளம் போடத் தெரியாதவர்கள் ஆகியோரும் இந்தப் பட்டியலில் உள்ளடங்குவர் என்று கூறினார்.
மனமாற்றத்துக்கு இன்றியமையாத அழைப்பு இது, சரியானதைச் செய்வதன்மூலம் நாம் மனம் மாற முடியும் என்றுரைத்த திருத்தந்தை, துவைக்கப்போட்டு துணியில் கறையை நீக்குவது போன்று இதயத்தின் கறையை அகற்ற முடியாது, ஆனால் நன்மை செய்து இதயத்தின் அழுக்கை அகற்ற முடியும் என்றும் கூறினார்.
எவ்வாறு நன்மை செய்வது என்பதையும் விளக்கிய திருத்தந்தை, நீதியைத் தேடுதல், ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்து ஊக்குவித்தல், கைவிடப்பட்டவர்களுக்காகப் பரிந்து பேசுதல், கைம்பெண்ணுக்காக வழக்காடுதல், மனித சமுதாயம் வேதனைப்படும் இடத்தில் நீதி வழங்குதல் போன்றவற்றைச் செய்வதாகும், இதனால் நம் இதயமும் சுத்தப்படுத்தப்படும் என்று கூறினார்.
தூய்மைப்படுத்தப்படும் இதயத்துக்கு கடவுளின் மன்னிப்பும் உறுதி செய்யப்படுகின்றது, தங்களின் அயலாரை தெளிவான செயல்களால் அன்புகூருபவரின் பாவங்களை கடவுள் கணக்கில் வைப்பதில்லை என்றும் மறையுரையில் கூறினார் திருத்தந்தை.
இந்தப் பாதையைத் தேர்ந்துகொண்டால், கடுஞ்சிவப்பாய் இருக்கும் உங்கள் பாவங்கள் உறைந்த பனிபோல வெண்மையாகும் என்கிறார் ஆண்டவர் இது மிகைப்படத் தெரிந்தாலும் இதுவே உண்மை, ஆண்டவர் தமது மன்னிப்பு எனும் கொடையைத் தாராளமாக நமக்குத் தருகிறார், நம்மை மன்னிக்கிறார் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்

## 01ம் பக்கம் — குடும்பமாக செபமாலை...

சிலுவையின் அடியில் நின்றபோது அருளப்பரைப் பார்த்து "இதோ உன் தாய்" என்று கூறினார், அந்நேரத்திலிருந்தே தேவ அன்னை எல்லோருக்கும் அன்னையாக திகழ்கிறார். இன்று பல பெற்றோருக்கு செபமாலை சொல்வதற்கு நேரமில்லாததால் நீங்கள் குடும்ப செபமாலை செபிக்க முன்வாருங்கள். உங்களைப் பார்த்து உங்கள் பெற்றோர் செபமாலை செபிக்க முன்வருவார்கள். இன்று நீங்கள் வீடு திரும்பும்போது உங்கள் பெற்றோருக்கு எடுத்துச் செல்லும் செய்தி இதுவாகத்தான் இருக்க வேண்டும். முன்மாதிரிகையான கிறிஸ்துவின் பிள்ளைகளாக திகழுங்கள் என்று கூறினார்.

திருப்பலியில் இறுதியில் தேவ அன்னைக்கு பிள்ளைகளை உப்புக்கொடுத்து இறுதி ஆசீரை வழங்கினார் கர்தினார் பேராயர்.

திருப்பலியின் முடிவின் பின் தனிப்பட்ட முறையில் மாணவர்கள் பேராயரைச் சந்தித்து ஆசீரைப் பெற்றுக் கொண்டார்கள். அன்றைய தினம் தேவ அழைத்தல் பற்றிய கண்காட்சியும் நடாத்தப்பட்டது. அன்றைய தினம் 20,000 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

## 01ம் பக்கம் — அருட்தந்தை சகாயநாதன்...

ஒப்புக்கொடுக்கப்பட்டு... மன்னார் அருட்தந்தையர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் பறப்பாங்கண்டல் பங்குத்தந்தையும் திருவுளபணியாளர் சபையின் முன்னாள் மாகாண முதல்வருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஞான ஒளி பிரார்த்திக்கின்றது.

## 01ம் பக்கம் — அருட்தந்தை அன்சலம் ...

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பொரலை கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற ஞான ஒளி பிரார்த்திக்கின்றது.

## 01ம் பக்கம் — அநீதிகளை மறைப்பதற்கு..

- நோன்பு வெளிப்புற நடவடிக்கை அல்ல அது இதயத்திலிருந்து வரவேண்டும். செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம் என்று திருத்தூதர் யாகப்பர் கூறுகிறார், ஞாயிறு தோறும் தவறாமல் திருப்பலிக்குச் சென்று திருநற்கருணை வாங்கும் ஒருவர் தனது வேலையாளுக்கு நியாயமான கூலி கொடுக்காமலும், ஓய்வூதியத்துக்குப் பணம் செலுத்தாமலும் இருந்தால் அவரின் விசுவாசத்தால் என்ன பயன்.

## 02ம் பக்கம் — இறைவனோடு...

வழிபாட்டினை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முன்னின்று நடத்துவார்.

இதைத் தொடர்ந்து, உரோம் நகரிலும், உலகின் பல ஆலயங்களிலும் நிகழும் முழு இரவு நற்கருணை ஆராதனையின்போது, ஒப்புரவு அருள் அடையாளம் வழங்க, அருள் பணியாளர்கள் காத்திருப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த நாட்டில் நிலவும் சூழலுக்குத் தகுந்தவாறு, இந்த முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் புதுவழி நற்செய்திப் பணி திருப்பீட அவை அழைப்பு விடுத்துள்ளது.

பங்குனி 13ம் திகதி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளின் இரண்டாம் ஆண்டு நிறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

## 06ம் பக்கம் — நல்லவர் சூசையின்..

பெற்று அலைந்தது குழப்பம் தெளிய கோமகனுக்கோர் நான்காம் கனவும் பிறந்தது கனவினிலே எச்சரிக்கை தூதராலே உணர்ந்தது கண்டுகொண்ட திருக்குடும்பம் கலிலேயாவுக்குள் புகுந்தது

கனவு வழி கடவுள் ஆணை சூசை வாழ்வில் நிறைந்தது - குடும்பக் கடமை தவறா தலைமையாக சூசை வழி திகழ்ந்தது!

★★★★★

✸✸✸✸✸✸

## 03ம் பக்கம் — இத்தவக்காலத்தில் எனக்கு..

இறுதியாக, நமது இயேசு கிறிஸ்துவின் வரிகள் "நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன் என் தாகத்தை தணிக்கவில்லை நான் அன்னியனாய் இருந்தேன் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையில் இருந்தேன் என்னை கவனித்துக் கொள்ளவில்லை. மத் 25:42-43. இது அனைவருக்கும் கொடுக்கப்பட்ட ஒரு சவால் அடுத்தவரை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நாம் ஆண்டவனையே ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். அடுத்தவரை மனிதனாக அடையாளம் காணாத போது இறைவனையே அடையாளம் காணாமல் செல்கிறோம். ஆனால், நமக்கு அடுத்திருப்பவரை மனிதனாக ஏற்று கொள்ளும் போது நாம் ஆண்டவனையே ஏற்றுக்கொள்கிறோம். நமக்கு அடுத்திருப்பவர் மனிதர் என்று நாம் எப்போது தெளிவு பெறுகிறோமோ அன்று அனைவருக்கும் சம உரிமை கிடைக்கும். நாம் விரும்பும் சொர்க்கத்தை இம்மண்ணகத்தில் காணலாம். உயர் சாதிக்காரனும் சம உரிமை பெறும் போது, அவரவர் தத்தம் தாய்மொழியில் உயர்பு பெறும்போது, நீயும் நானும் சகமனிதரை மனிதராக ஏற்றுக்கொள்ளும் போது சொர்க்கம் இம்மண்ணகத்தில் நிலை நாட்டப்படும். நமக்கு அடுத்திருப்போரை மதிப்போம்! மனிதத்தை காப்போம்!!

## 06ம் பக்கம் — தமிழினதும்...

இவை பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப்ப பாடப்பட்டவை. மேல்நாட்டுக் கிறிஸ்தவ தமிழறிஞரான் ஜி. யு. போப் அவர்கள் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். அதன் பெருமையை உலகம் முழுவதும் அறியச் செய்தவர். அவர் சொல்வார் "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்று. "அம்மையே அப்பனே ஒப்பிலா மணியே" என்று இறைவனை பக்திப்பரவசத்தோடு அழைக்கும் வார்த்தைகள் சைவ, வைணவ தமிழ் இலக்கியங்களில் உள்ளன.

அதேபோன்று கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய திருவிவிலியத்தின் ஞான நூல்கள் என்று சொல்லப்படுபவை பக்தி இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றிலே சங்கீதங்கள். (சாம்ஸ்) என்று சொல்லப்படுகின்ற திருப்பாடல்கள் இஸ்ராயல் மக்களின் இறையனுபவமாகக் கொள்ளப்படுகின்றது.

திருவிவிலியத்தில் மட்டுமல்ல கிறிஸ்தவ சமயத்தின் கடந்த 2000 ஆண்டுகால வரலாற்றில் பல துறவிகள், புனிதர்கள் போன்றோர் பல பக்தி இலக்கியங்களைப் படைத்துள்ளனர். அவற்றில் பல குருக்களுடைய கட்டளைச் செபமாக உள்ளது.

ஆகவே தமிழ்க் கிறிஸ்தவர்கள் இரண்டு பக்திப் பாரம்பரியத்திற்கு சொந்தமானவர்கள். ஒன்று தமிழின் பக்திப் பாரம்பரியம். மற்றது கிறிஸ்தவத்தின் பக்திப் பாரம்பரியம். ஆகவே இந்தப் பின்னணியில்தான் இக்காலத்தில் வெளிவருகின்ற கிறிஸ்தப் பக்திப் பாடல்களை நாம் நோக்க வேண்டும். எண்ணம் குழப்பம்

## 13ம் பக்கம் — டிலாசால்...

தபோபுண்ணியத்தாலும் ஓயாத பணியாலும் களைப்புற்று உடல்நலம் குன்றியவராக 1719ம் ஆண்டு ஒரு பெரிய வெள்ளியன்று அதாவது தமது 68வது பூர்த்தியாக இருவாரங்கள் இருக்குமுன்னர் றொவான் எனும் இடத்திற்கு அருகிலுள்ள புனித. ஜொண் (Saint Yon) இல் தன்னுயிர் நீர்த்து இறைபதம் அடைந்தார். தூய டிலாசால் ஆசிரியருக்கான பயிற்சிக் கலாசாலைகளையும் சமூகக் கடமையில் தவறுவோறுக்கென சீர்திருத்தப்பள்ளிகளையும் தொழில்நுட்பக் கல்லூரிகளையும் விஞ்ஞானம் தற்கால மொழிகளுக்கௌ இடை கலைத்துறை நிலைக் கல்வி நிறுவனங்களையும் நிறுவிய முதன் முயற்சியாளார் எனலாம். டிலாசாலின் இப்புனித சேவையானது பிரான்ஸ் முழுவதும் பரவியதுடன் மரணத்தின் பின்னர் உலக முழுவதும் வெகுவாக விஸ்தரிக்கப்பட்டது. 1900இல் டிலாசால் தூயவராக உயர்த்தப்பட்டார். இவரது உதாரணமிகு எளிமை வாழ்வினாலும் ஆர்வமுள்ள எழுத்துமிக்க படைப்புக்களாலும் 1950ல் கல்வி கற்பிக்கும் அனைத்து அமைப்புக்களிலும் செயற்படும் அனைவரதும் பாதுகாவலராக 1950ம் ஆண்டில் பிரகனப்படுத்தப்பட்டார்.

கல்வி அமைப்பு முறைகளில் பணிபுரிவோர் தம் சேவையினைத் திறம்படச் செய்வதற்கும் அகத்தூண்டலாக தூய டிலாசால் விளங்கி வருகிறார். வெற்றியையும் வலுவின்மையையும் பரிவுடன் நோக்குவதோடு அதன் விளைவுகளை ஏற்றுக் கொண்டு குணம் பெறுவதனாலும் எமக்கு உணர்த்தும் ஒரு அகத்தூண்டலாகப் விளங்கி வருகிறார். தற்போது டிலாசால் அருட்சகோதரர்கள் தமது பணியினை 80 நாடுகளுக்கும் அதிகமாக ஆற்றி வருகின்றனர். இலங்கையில் 55 அருட்சகோதரர்கள் ஒன்பது துறவற குழுமங்களிலும் மூவர் இறைஅழைத்தல் பயிற்சி மடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் 13 பிரதான நிறுவனங்களில் (முறைசார் / முறைசாரா கல்விமுறைகள்) 03 இறைஅழைத்தல் பயிற்சி மடங்களிலும் ஏனைய சிறு நிறுவனங்களிலும் பணிபுரிந்து வருகின்றனர். எமது பணிவாழ்வை நாம் 850 பொதுநிலை பங்காளிகளுடன் பகிர்வதுடன் 15700 பள்ளி மாணவர்கள் எம்மால் வழிநடத்தப்பட்டும் வருகின்றனர்.

இறையாசீருடன்

**சகோ. டென்சில் பெரேரா,**
**மாகாணத்தலைவர் - இலங்கை**
**130இ டிலாசால் வீதி, கொழும்பு - 15.**

## விற்பனைக்கு

அதுருகிரிய, இடமல் மாவத்தையில் 38 பேர்ச் நிலம் விற்பனைக்கு. அத்துருகிய சந்தியில் இருந்து 2 ½ கி.மீ தூரத்தில், மில்லேனியம் நகர் குடியிருப்பு வளாகத்திற்கும், செயின்ட் தந்தை பியோ தேவாலயத்திற்கும் அண்மையில் அழைக்கவும்.
071 - 7607391 (N 6604)

## மணமகன் தேவை



றோமன் கத்தோலிக்க மதம் 1978 ஆண்டு பிறந்த மகளுக்கு மணமகன் தேவை O/L சிங்களம், உயரம் 5’ 4” முழு விபரம் நேரில் பேசிக் கொள்ளவும்.
(N 6715)

★★★★★

## 13ம் பக்கம் — நல்லாயன் நம் அன்பு...

காலப்போக்கில் நாயக்ககந்த, கண்டி, போன்ற இடங்களிலே இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்த இளம் யுவதிகளுக்கும், சிறுவர்களுக்கும் பராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. 1938ம் ஆண்டில் திருமணமாகாத தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு இல்லம் நாயக்ககந்தயில் ஆரம்பிக்கப்பட்டது.

1957ம் ஆண்டு வத்திக்கான் அறிவுரைகளுக்குகேற்ப, நல்லாயன் சகோதரிகளால் நடாத்தப்பட்ட புனித பிரான்சிஸ் சேவியர் சபை சகோதரிகள் நல்லாயன் சபை சகோதரிகளுடன் மறு இணக்கம் செய்யப்பட்டது. அதுவரை அவர்கள் மறைமாவட்ட ஆயர்களால் நடாத்தப்பட்டுவந்தது. பின்னர் கொழும்பு பேராயரின் அனுமதியுடன் ஒன்றிணைந்தார்கள். இவர்களது பிரதான முதன்மையான பணி, கல்விப்பணியாகும். 1975ம் ஆண்டில் புரட்டாசி மாதம் 17ம் திகதி பாக்கிஸ்தானிலுள்ள முல்தான் மறைமாவட்ட ஆயர் பேட்றன்ட் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கையிலிருந்து நான்கு அருட்சகோதரிகள் **பாக்கிஸ்தானிற்கு** அனுப்பி வைக்கப்பட்டார்கள். நல்லாயனின் முதல் வித்தை அங்கேயும் விதைத்தார்கள். 1976ம் ஆண்டு தைமாதம் 10ம் திகதி பற்றிமாபூர் என்னும் கிராமத்தில் இன்னுமொரு இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. இது முல்தான் மறைமாவட்டத்தில் அமைந்துள்ளது. இன்று இலங்கை பாக்கிஸ்தான் சகோதரிகள் 4 மறை மாவட்டங்களில் இணைந்து பணியாற்றி வருகின்றனர். முல்தான், லாகூர், கராச்சி குவேட்டா ஆகிய இடங்கள் குறிப்பிடத்தக்கது. நல்லாயனின் மறைப்பணியை உலகெங்கும் 74 நாடுகளில் பரவலாக செயல்படுத்தி வருகின்றனர். இலங்கை பாக்கிஸ்தான் மாகாணத்தில் ஏறக்குறைய 400 சகோதரிகள் பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவை பின்வருமாறு:-

**கல்வி :-** தனியார் பாடசாலைகள் அரசாங்கபாடசாலைகள் பாலர் பாடசாலைகள்.

நல்வரவு இல்லம், உளவள நிறுவனம், புனரமைப்பு நிலையம்.

**திருமணமாகாத தாய்மார்களும் :-** குழந்தைகளும்

சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், வயோதிபர் இல்லம், வாழ்வியல் பயிற்சி, மறைக்கல்வி பங்கு பணி, மலையக சிறார்களுக்கு பாதுகாப்பும், பணியும், யுத்தத்தின் பாதிக்கப்பட்ட இளம் யுவதிகள், சிறைச்சாலை பணி, புலம் பெயர்ந்த வெளிநாட்டுப் பெண்மணிகள்

கடன் வழங்கி ஊக்குவிக்கும் திட்டம், செயற்பாடு

வெளிநாட்டு மறைப்பணிகள்

புனித மேரி யுப்ரேசியா **தியான சபை** சகோதரிகளையும் உருவாக்கி மக்தலேனா சகோதரிகள் என அழைக்கப்பட்ட நல்லாயன் தியான சபையையும் ஆரம்பித்து அப்போஸ்தலிக்க பணியில் ஈடுபட்டுள்ள சகோதரிகளின் உறுதுணையாகவும் ,சக்தி கொடுக்கின்ற செப ஊற்றாகவும் செயல்படுகிறார்கள். இவர்கள் மக்களோடு ஒன்றாக செபிப்பதும் தேவையானவர்களிற்கு ஆன்மீக வழிகாட்டியாகவும் விளங்குகிறார்கள். இன்று 373 அர்ப்பணிக்கப்பட்ட தியான சகோதரிகள் இலங்கையிலும் இன்னும் உலகில் பல பாகங்களிலும் செயற்படுகின்றனர். இன்னும் எமது நல்லாயன் பொதுநிலையினர் குழுவும் தோளோடு தோளாக நின்று பணி ஆற்றுகின்றனர். இது எமக்கு பலமும் ஒத்துழைப்பும் நிறைய கிட்டுவதாக உணர்கிறோம். இன்னுமொரு மகிழ்ச்சியான சம்பவம் கடந்த வருடம் ஆனி மாதம் 27ம் திகதி 2014ல் இடம்பெற்றது. அதாவது நம் அன்பு நாயகியின் சபையானது நல்லாயன் சகோதரிகளுடன் மறு இணக்கம் செய்யப்பட்டது. அன்று 358 சகோதரிகள் இணைந்தனர். 1853ம் ஆண்டு உரு வான பொதுஆட்சி முறையின் பின்னர், மீண்டும் உரோமையிலிருந்து அனுமதி பெற்று இப்பொழுது ஒன்றாக இரு பாலாரும் இணைந்து செயல்படுகின்றனர். ஆகவே எமது குழு எண்ணிக்கை 3,374 நல்லாயன் அன்பு நாயகியின் சபை சகோதரிகள் ஊக்கமாக செயல்படுகின்றனர். இறைவனுக்கு மகிமை!

**நல்லாயன் சகோதரிகள், நாயக்ககந்த, வத்தளை.**
**நன்றி, அருட்சகோ வினிப்பிரிடா** R.G.S

## 01ம் பக்கம் — குருத்துவத்தின்..

முதல் நிலைப்படியில் இணைகிறார்கள் என்பது அவர்கள் கிறிஸ்துவை ஆடையாக அணிந்துக் கொள்கிறார்கள். எனவே கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் முன்மாதிரியாகக் கொண்டு வாழுமாறு கேட்டுக்கொண்டார்." இந்நிகழ்வினை எமது குருமட அதிபர் அருட்பணி விக்டர் சில்வா அடிகளாரின் தலைமையில் எமது ஆன்மீக இயக்குனர் அருட்பணி இக்னேஷியஸ் வருணகுலசிங்கம் அடிகளாரின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்டது. இந்த விழாவிற்கு குருமட மாணவாடகளின் பெற்றோர் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் பலரும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. சிரேஸ்ட குருமடமாக கருதப்படும் புனித ஜோன் மேரி வியான்னி குருமடத்தில் இணைந்து உங்களையும் கிறிஸ்துவின் பணியாளராக மாறிட அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : பெ. டிலோயிட்சன்**

# புதுமை நிறைந்த கர்த்தர் (மடு) திருப்பாடுகளின் திருத்தலத்தின் வருடாந்த திருவிழாவுக்கான அழைப்பு



## மன்னார் பரப்புக்கடந்தான் கர்த்தர் திருத்தலத்தில் 27.03.2015 திருவிழா நாளின் நிகழ்ச்சிகள்

காலை 7.30 மணிக்கு திருவிழா சிறப்புத் திருப்பலி

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.

திருப்பலிகள் : காலை 10.00 மணிக்கு,
நண்பகல் 12.00 மணிக்கு , பகல் 1.00 மணிக்கு
(திருப்பலியின் பின் திருச்சிலுவை பவனி),
மாலை 4.00 மணிக்கு.

- மடுத்திருத்தலத்தில் இருந்து கி.மீ 15
- உயிலங்குளத்தில் இருந்து கி.மீ 9.5

(வருகைத் தரும் யாத்திரிகளுக்கு திருப்பலியின் பின்னர் அன்னதானம் வழங்கப்படும்)

பங்குத்தந்தையுடன், பங்குமக்கள்
தொடர்புகளுக்கு 077 5903356

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்







தற்போது எமது கத்தோலிக்க புத்தகசாலையில் 2015ஆம் ஆண்டுக்கான கத்தோலிக்க தகவலேடு (ALMANAC) மற்றும் சிறிய தொலைபேசி கையேடு (MINI TELEPHONE DIRECTORY)ஆகியவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

கவனத்திற்கு : கத்தோலிக்க தகவலேடு (ALMANAC)

சிறிய தொலைபேசி கையேட்டுடன்
விலை ரூபா. 150.00

சிறிய தொலைபேசி கையேடு மட்டும்
விலை ரூபா 25.00



அத்தோடு செபப் புத்தகங்கள், திருச்சுருபங்கள், புனிதர்களின் படங்கள், இறுவெட்டுக்கள், (ஒலி, ஒளி இறுவெட்டுக்கள்) இறந்தோர் நினைவு கல், புதை குழி கட்டுமானப் பொருட்கள், மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள் உட்பட பல்வேறு விதமான பரிசுப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927
பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்